JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

மலர் 14 | இதழ் 10 | டிசம்பர் 2023 | ஆண்டு சந்தா ₹ 100

உலக மக்கள்
பட்சபாதம் பார்க்கலாம்...
ஆனால் உன்னைப் படைத்த

## தேவன்
## பட்சபாதமில்லாதவர்!

# அன்புக்குரிய வாலிபப் பிள்ளைகளுக்கு என் அன்பின் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!!

நீங்கள் கடைசிக்கால எழுப்புதலுக்காக ஆண்டவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்!

கடந்த 1985 ஆம் வருடம் முதல் வாலிபர்கள் மத்தியில் பலவகையான ஊழியங்களை செய்ய கிருபையளித்த தேவனுக்கு ஸ்தோத்திரங்களை செலுத்துகின்றோம்.

இவ்வூழியத்தைப் பல வகைகளில் நேசித்து, ஆதரித்து, உதவி வரும் தன்னார்வ நெஞ்சங்களுக்கும், ஜெபக்குழு அங்கத்தினர்களுக்கும், ஊழியர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், மொழிபெயர்ப்பாளர்களுக்கும், வாசகர்களுக்கும் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்தின் சார்பாக எங்களது இனிய கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த கிறிஸ்துமஸ் நாட்களில் நம் இயேசுவைப் போல பட்சபாதம் இல்லாதவர்களாய் எல்லோரையும் நேசித்து அன்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் எந்தவிதமான வேற்றுமையின்றி எல்லோரையும் நேசிக்கும்போது தேவன் சந்தோஷப்பட்டு களிகூருவார். வாலிபர்களாகிய நீங்கள் இயேசுவைப் போல பட்சபாதமில்லாத அன்பை வெளிப்படுத்தி அநேக வாலிபர்களை ஆதாயப்படுத்துங்கள்!

அன்புடன்
மோகன் சி. லாசரஸ்

# வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாகவோ தெரியப்படுத்துங்கள்.

**30,000 வாலிபர்கள்**
கையில் தவழும்
வாலிபர் உலகம் பத்திரிக்கை
உங்கள் கையில் உள்ளதா?




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். Youth.jesusredeems.com என்ற website மூலமாக ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். மேலும் தொடர்புக்கு 9750955547

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி – 628 211.
Phone: 04639-353333 | Cell:9750955547
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

*ஆசிரியர்:* **மோகன் சி. லாசரஸ்** *இணை ஆசிரியர்:* **அவினாஷ்**
*ஆசிரியர் குழு:* **வயலா | ஜெயசீலன் | ரவி | ரேச்சல் | கிளாடிஸ் | சுமா | கெத்சி கிளார்வின் | சதீஷ் | காலேப் | பெனிட்டா | ஜெயா | ஜாய்லின் ஜாண்**
*வடிவமைப்பு:* **'இயேசு விடுவிக்கிறார்' வடிவமைப்பு குழுவினர்**

# தலைவாசல்

# பட்சபாதம் இல்லாதவர்

அன்பான இளம் நெஞ்சங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்!

தன்னுடைய எட்டு பிள்ளைகளில் ஏழு பேரை உயர்ந்த ஸ்தானத்தில், உயர்ந்த வேலையில் நிறுத்தி அழகு பார்த்த தகப்பன், தன் கடைசி பிள்ளையின் மீது அன்போ, அக்கறையோ காட்டாமல், அவனுக்கு இதுதான் தெரியும், இதற்கு தான் இவன் பயன்படுவான் என்று சொல்லி புறக்கணித்தார். தன் சகோதரர்களுக்கு கிடைக்கும் மதிப்பு, மரியாதை மற்றும் அன்பின் அளவில் சிறிதளவும் தனக்கு கிடைக்காத போதும் சோர்ந்து போகாமல், தன்னை எந்த பட்சபாதமுமின்றி நேசிக்க தேவன் ஒருவர் உண்டு என்பதை அறிந்த அந்த கடைசி (எட்டாவது) மகன் முற்றிலுமாக கர்த்தரையே சார்ந்து இருந்தான். உலகப்பிரகாரமான தகப்பனுடைய அன்பு பட்சபாதமுள்ளது என்பதை அறிந்த அவன், தேவனை இறுகப் பற்றிக் கொண்டு, அவர் மீதிருந்த அளவற்ற விசுவாசத்தினாலும் அன்பினாலும், தேவன் அவனோடிருக்கிறார் என்ற நிச்சயத்தோடு தனிமையில் என்றும் அவரில் மகிழ்ந்து களிகூர்ந்து அவரை துதித்து மகிழ்ந்தான். அதனால் ஒதுக்கப்பட்ட அவனை தேவன் உன்னதத்திலே உயர்த்தி கிரகிக்க முடியாத அளவு ஆசீர்வதித்தார். அவன் தான் நம் சங்கீதக்காரனாகிய தாவீது.

உலகத்தின் பட்சபாதம் உன்னை உருக்குலைத்து, உடைந்து போகப் பண்ணலாம். ஆனால் உன்னை உண்மையாக நேசித்து, உனக்காக ஜீவனைத் தந்த தேவனிடம் எந்த பட்சபாதமும் இல்லை. காரணம், அவர் உன்னை உருவாக்கும் போதே உன்னை மேன்மைப்படுத்த சித்தம் கொண்டார். மனிதனின் பட்சபாதம் ஒரு போதும், தேவன் உனக்கு வைத்திருக்கும் ஆசீர்வாதத்தை தட்டிப் பறிக்க முடியாதே.

**வாலிபனே, உலகத்தின் அன்பில் நிச்சயம் பட்சபாதம் உண்டு.**
**ஆனால் உன்னை உண்டாக்கிய தேவனிடத்தில் எந்தவிதமான பட்சபாதமுமில்லை.**
**தாவீதுக்கு வீட்டிலும் பட்சபாதம் காட்டினார்கள்.**
**சிங்காசனம் அடையக்கூடாதென்று சவுலும் பொறாமைக் கொண்டு ஜீவன் போகத்தக்கதாக துரத்தினான்.**

நீ தேவனுக்காக வைராக்கியம் கொண்டு எழும்பும்போது ஊழியப்பாதையில் உன்னை முடக்க, தடுக்க ஜனங்களின் பட்சபாதமும் பகைமை உணர்வும் உன்னைத் தாக்கினாலும் பதறாமல் முன்னேறு! காரணம் உன்னை எழுப்புதலில் பயன்படுத்த சித்தம் கொண்ட இயேசு பாசத்தோடு உன்னை பலப்படுத்தி பயன்படுத்துவார்!

கிறிஸ்துவின் பணியில்
**அவினாஷ்**



சாட்சி தொகுப்பு: பெனிட்டா



# அலட்சியம் அழைப்பு இலட்சியம்

**இந்த மாதம், அஸ்வினி என்ற சகோதரியை தேவன் எப்படி உடைத்து உருவாக்கி அவருடைய ஊழியத்தை செய்ய அழைத்தார் என்று அவர்களுடைய சாட்சியை அவர்களே நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள். வாருங்கள் கேட்போம்.**

**உங்களது குடும்பம் மற்றும் சிறுபிராயம் பற்றி சொல்லுங்களேன்?**

நான் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து, கர்நாடகா மாநிலத்தில் வளர்ந்து அங்கு தான் என்னுடைய பள்ளிப் படிப்பைப் படித்தேன். என் தகப்பனார் திரு. மது மற்றும் தாயார் திருமதி. சுமதி ஆவர். எனக்கு அசோகன் என்ற ஒரு அண்ணன் இருக்கிறான். அவன் BE முடித்து ஒரு கம்பெனியில் வேலை செய்து வருகிறான்.

**சூப்பர்... அழகான குடும்பம்..! உங்களது பள்ளிப் படிப்பைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்களேன்?**



எனக்கு 10ஆம் வகுப்பு வரைக்கும் படிப்பில் பெரிய ஆர்வம் இல்லை. அதுவரை நான் எந்த ஒரு இலட்சியத்தோடும் படிக்கவில்லை. 11ஆம் வகுப்பு படிக்கும்போது தான் எனக்கு படிப்பின் மீது மிகுந்த ஆர்வம் உண்டாகி ஒரு இலட்சியத்தோடு படிக்க ஆரம்பித்தேன். Pharm D, 6 வருட கோர்ஸ் படிக்க வேண்டும் என்பது தான் எனது கனவாக இருந்தது.

**சரி... நீங்கள் உங்களுடைய இலட்சியமான Pharm D படிப்பைப் படித்து உங்களுடைய இலட்சியத்தை அடைந்தீர்களா?**

சொல்கிறேன்... நான் 12ஆம் வகுப்பு படிக்கும்போது ஆண்டவர் என்னை ஊழியத்திற்கு அழைத்தார். ஆனால் அதை நான் மறுத்துவிட்டேன். ஏனென்றால் Doctor of Pharmacyஆக வேண்டும் என்பதே எனது இலட்சியமாக இருந்ததால் எனக்கு ஊழியத்திற்கு வருவதற்கு விருப்பமில்லை. எனது பெற்றோரும் அதை விரும்பவில்லை. தொடர்ந்து கடினமாக படித்து 12ஆம் வகுப்பு தேர்வை எழுதி விட்டு 'எப்படியும் நல்ல மதிப்பெண் வரும், என்னுடைய இலட்சியத்தை நிறைவேற்ற வேண்டும்' என்ற கனவுடன் தேர்வு முடிவை எதிர்பார்த்து காத்திருந்தேன்.

**நீங்கள் எதிர்பார்த்தபடி தேர்வு முடிவு வந்ததா? நீங்கள் விரும்பிய course படித்தீர்களா?**

என்னுடைய 12ம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவிற்காக நான் காத்துக்கொண்டிருந்தேன். ரிசல்ட் வருகிற அன்றைக்கு அதிகாலை 5 மணிக்கு ''இந்த தேர்வில் நீ தோல்வியுற்றால் என்ன செய்வாய்?'' என்று ஒரு சத்தம் 3 முறை கேட்டது. அந்த சத்தம் கேட்டதும்



எனக்குள் ஒரு பயம் உண்டானது. ஆனால் நான் அதை பொருட்படுத்தாமல் நம்பிக்கையுடன், ''குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும் ஜெயமோ கர்த்தரால் வரும்'' என்ற வேத வசனத்தை அறிக்கை செய்து ஜெபித்தேன். ஏனென்றால் நான் மிகவும் கடினமாக படித்து தேர்வு எழுதியிருந்தேன். அதனால் நான் மிகவும் நம்பிக்கையுடன் இருந்தேன். சாயங்காலம் தேர்வு முடிவு வந்தபோது நான் கணக்குப் பாடத்தில் தோல்வியுற்றிருந்தேன். அந்த ஏமாற்றத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, ஏனென்றால் **Mathematics** என்னுடைய **favourite subject**. என் பெற்றோர் என்னை உற்சாகப்படுத்தி அந்த பாடத்தை திரும்ப எழுத வைத்தார்கள். இரண்டாவது முறை எழுதிய தேர்விலும் தோல்வியையே சந்தித்தேன்.

**அச்சச்சோ... தோல்வியை சந்தித்தபோது உங்களுடைய மனநிலை எப்படி இருந்தது?**


திரும்பத் திரும்பத் தோல்வியை சந்தித்தவுடன் கடவுளே இல்லை என்ற முடிவுக்கு வந்தேன். 'நான் கடின முயற்சி எடுத்துப் படித்தும் எனக்கு வெற்றி கிடைக்கவில்லையே' என்று மிகவும் சோர்ந்து போனேன். ''நீ எல்லோரிடமும் இயேசு என்ன கேட்டாலும் செய்வார் என்று சொல்லுவாய்! இப்பொழுது உன் இயேசு எங்கே'' என்று என் தோழிகள் என்னை கேலி செய்ய ஆரம்பித்தார்கள். இதைக் கேட்கக் கேட்க எனக்கு இன்னும் கர்த்தரின் மேல் வெறுப்பு வர ஆரம்பித்தது. கடவுளே இல்லை என்று சொல்லி என் விருப்பத்தின்படி வாழ ஆரம்பித்தேன். அந்த நேரத்தில் சமூக வலைத்தளங்களை அதிகமாகப் பயன்படுத்த ஆரம்பித்தேன். என் நேரத்தையெல்லாம் அதில் செலவழித்தேன். 8 மாதங்கள் **Social Media** தான் என் வாழ்க்கை என்று ஆண்டவரை விட்டுப் பிரிந்து இருந்தேன்.

**சரி... அதன்பிறகு எப்பொழுது, எப்படி ஆண்டவருக்குள் வந்தீர்கள்?**

எனக்கு அதிகாலை 3 மணிக்கு எழும்பி ஜெபிக்கும் பழக்கம் இருந்தது. ஆனால் இந்த 8 மாதங்களும் நான் ஜெபிக்காமலிருந்தேன். 8 மாதங்களுக்குப் பின் ஒருநாள் காலையில் மொபைல் வைத்து பார்த்துக் கொண்டிருந்த போது, ''முழங்கால்படியிட்டு ஜெபி'' என்ற சத்தம் கேட்டது. நான் உடனே முழங்கால்படியிட்டு, ஜெபிக்கவே ஆரம்பிக்கவில்லை. அதற்குள் இயேசுவின் சிலுவைக் காட்சியைப் பார்த்தேன். அதைப் பார்த்தவுடன், என் உள்ளம் மிகவும் வேதனை அடைந்தது. சிலுவைக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்கும் போதே, ''உனக்காக நான் எல்லாவற்றையும் சகித்தேன், நீ இந்த உலகத்தின் படிப்பிற்காக என்னை வேண்டாம் என்று சொல்கிறாயா?'' என்று ஏக்கத்துடன் என்னைப் பார்த்துக் கேட்டார். உடனே நான் என் தவறை உணர்ந்து அழுது ஜெபித்து என்னை அர்ப்பணித்தேன். இயேசு என்னோடு பேச ஆரம்பித்தார். ''நீ இந்த வாலிப வயதில் என்னை அறிந்திருக்கிறாய். ஆனால் உன்னைப்போல் உள்ள வாலிபர்கள் அடிமைத்தனத்தில், பாவத்தில் சிக்கி இருக்கிறார்கள். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பவர் யார்?'' என்று கேட்டவுடன் என் வாழ்க்கையை முழுவதுமாக ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்தேன்.

**சரி, ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த பின்பு உங்கள் வாழ்வில் நடந்தது என்ன?**

நான் என்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்த பின்பு ஆண்டவர் என்னோடு, ''கிறிஸ்துவின் அன்பைவிட்டு



**நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்" (ரோமர் 8:36,38,39)** என்ற வசனத்தை ஞாபகப்படுத்தினார். உடனே நான் 'என் வாழ்க்கையில் தோல்வி வந்தாலும், மரணம் வந்தாலும் நான் உம்மை விட்டு பிரியமாட்டேன் ஆண்டவரே' என்று அர்ப்பணித்தேன். 2 மாதங்களுக்குப் பிறகு நான் தேர்வை எழுதினேன். அதிலும் நான் கணக்குப் பாடத்தில் தோல்வியைச் சந்தித்தேன். ஆண்டவரிடம், இயேசப்பா ஏன் எனக்கு இந்த தோல்வி? நான் முழுவதுமாக என்னை உங்களுக்கு ஒப்புக்கொடுத்தேனே என்று கேட்டேன். ஆண்டவர் உடனே என்னிடம், 'நீ என்ன அர்ப்பணித்தாய்? தோல்வி வந்தாலும், மரணம் வந்தாலும் உம்மை விட்டு பிரியமாட்டேன் என்று அர்பணித்தாய் அல்லவா' என்று கேட்டார். அதற்குப் பிறகு நான் ஆண்டவரிடம் எந்த கேள்வியும் கேட்கவில்லை. அடுத்த 3 மாதங்களில் ஒரு கொடிய வியாதி வந்து மரணப்படுக்கையில் ஆனேன். என்ன வியாதி என்றே மருத்துவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. 6 மாதங்கள் சிகிச்சையில் இருந்தேன். கடைசியாக மருத்துவர்கள் ''மூளையில் டிபி நோய் தாக்கியிருக்கிறது, இலட்சத்தில் ஒருவருக்கு தான் இந்த வியாதி வரும், பைனல் ஸ்டேஜ் எங்களால் காப்பாற்ற முடியாது'' என்று சொல்லி 48 மணி நேரம் கெடு கொடுத்தார்கள். அந்த நேரத்தில் என் பெற்றோர் எங்கள் மகள் ஜீவனோடு எங்கிருந்தாலும் போதும் என்று சொல்லி நான் ICUவில் இருக்கும்போது என்னை ஒப்புக்கொடுத்து ஜெபித்தனர். அதற்கு முன்புவரை என் பெற்றோர் ''பெண் பிள்ளையை எப்படி ஊழியத்திற்கு அனுப்புவது, பாதுகாப்பு இல்லை'' என்று பல காரணங்களைக் கூறி என்னை ஊழியத்திற்கு அனுப்பவில்லை. கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு என்னை பரிபூரணமாய் சுகப்படுத்தி, எனக்கு மறுஜீவனைக் கொடுத்தார். அதற்குப் பிறகு இன்று வரை அந்த நோய்க்கு நான் சிகிச்சை எடுக்கவேயில்லை.



சகோதரி அஸ்வினி தன் குடும்பத்தாருடன்...

**தேவனுக்கே மகிமை...! மறுஜீவனைக் கொடுத்த ஆண்டவருக்கு நீங்கள் என்ன செய்ய ஆரம்பித்தீர்கள்?**

நான் ஜெபித்தேன்... ஆண்டவர் வேதாகம கல்லூரி படிக்க வழிகாட்டினார். அதன்படி வேதாகம கல்லூரிப் படித்தேன். படித்துக்கொண்டிருக்கும் போதே முழுநேர ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டு இப்பொழுது முழு நேரமாக ஊழியம் செய்து வருகிறேன்.

**வாலிபர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வாலிப வயதில் உன் சிருஷ்டிகரை நினை என்று வேதம் சொல்கிறது. வாலிபர்களாகிய நாம் இயேசுவை நம்முடைய நண்பனாக வைத்துப் பயணிக்கும்போது நமக்கு தோல்விகள், வியாதிகள், அவமானங்கள் வரும். அதைப் பார்த்துப் பின்வாங்கிப் போகாமல் அதை மேற்கொள்ள கர்த்தரிடத்தில் கிருபையைக் கேளுங்கள். ஆவியானவர் உங்களை வழிநடத்துவார்.

**அன்பான வாலிபர்களே! உலக இலட்சியத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்த சகோதரி அஸ்வினியை ஆண்டவர் தம்முடைய உன்னத சேவையை செய்ய அழைத்து அவர்களுக்கென்று அவர் வைத்திருந்த பரம இலட்சியத்தை நோக்கி ஓட வைத்திருக்கிறார். "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல" என்று கர்த்தர் சொல்லுகிறார். ஆகையால்தான் தேவன் ஒருசிலரை உடைத்து உருவாக்கிப் பயன்படுத்துவார். இன்றைக்கு நீங்கள் கூட இயேசுவின் அழைப்பை அலட்சியம் செய்கிறீர்களா? உங்கள் சுய சித்தத்தின்படி காரியங்களை செய்ய பிரயாசப்படுகின்றீர்களா? மனந்திரும்பி இயேசுவின் சத்தத்திற்கு செவிகொடுத்து, அவர் சித்தம் செய்ய உங்களை ஒப்புக்கொடுங்கள்.**





Heart Beat

# ஏந்திய கை?

ஆலோசனை: அலி

நான் ஒரு விடுதியில் தங்கி ஒன்பதாம் வகுப்புப் படித்து வருகிறேன். எனது பெற்றோர் கடந்த கொரோனோ கொள்ளை நோய் பரவிய நேரத்தில் பாதிக்கப்பட்டு இறந்து விட்டார்கள். என் சொந்தக்காரர் ஒருவர் என்னையும் என் தங்கையையும் ஒரு கிறிஸ்தவ விடுதியில் சேர்த்து விட்டார்கள். என் பெற்றோர் இருக்கும் போது எல்லா வருடமும் கிறிஸ்துமஸ் தினத்தன்று நாங்கள் ஆலயத்திற்கு சென்று வருவோம். அதன்பிறகு எங்கள் தகுதிக்கு ஏற்ப 5 சிறுபிள்ளைகளுக்கு உணவு, உடை, கேக் என எடுத்துச் சென்று அவர்களோடு கிறிஸ்துமஸ் தினத்தைக் கழிப்போம். ஆனால் இந்த வருடம் எனக்கே அந்த நிலமை வந்து விட்டது என்று மிகவும் கவலையுடன் இருக்கிறேன். ஒரு கம்பெனி ஆரம்பித்து அநேகருக்கு, வேலை வாய்ப்பு கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பது தான் எனது கனவு. எல்லா வருடமும் எப்பொழுது கிறிஸ்துமஸ் வரும் என்று எதிர்பார்த்து இருப்போம். ஆனால் இந்த வருடம் ஏன் இந்த கிறிஸ்துமஸ் வருகிறது என்று நினைக்கத் தோன்றுகிறது. அதுமட்டுமல்லாமல் கிறிஸ்துமஸ் அன்றைக்கு ஆலயத்துக்குப் போக முடியுமா என்ற கேள்வியோடு இருக்கிறேன். எனக்கு உதவி செய்வீர்களா? - ஜெனி, மும்பை.

அன்புள்ள சகோதரி ஜெனி! உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட வேதனையான சூழ்நிலை, இழப்பு அனைத்தையும் நன்கு புரிந்துக் கொள்ள முடிகிறது. பெற்றோரை இழந்து ஒரு பெரிய கேள்விக் குறியோடு நீங்கள் இருப்பது மிகவும் வேதனையான ஒன்று. ஆதரவு இல்லாத அநேகருக்கு ஆதரவும் அன்பும் காட்டிய நீங்கள், இப்பொழுது உங்களுக்கு யாராவது ஆதரவு காண்பிப்பார்களா என்று ஏங்குவது புரிகிறது.

பண்டிகை நாட்களில் ஏழைகளை நினைவில் கொண்டு, அவர்களுக்கு உங்களுடைய அன்பையும், பொருள்களையும் பரிமாறிய உங்களுக்கு இன்றைக்கு யாராவது உதவுவார்களா என்ற நிலை உண்டானதைக் குறித்து மிகவும் வேதனையாகத் தான் உள்ளது.

ஜெனி, எப்பொழுது நாம் தகப்பனையோ அல்லது தாயையோ இழக்கின்றோமோ, அப்பொழுது இயேசு நமக்குத் தாயாகவும், தந்தையாகவும் பொறுப்பேற்று அந்த கடமையை செய்ய ஆரம்பிப்பார். உங்களுடைய வாழ்வில் தாய், தந்தை இருவரையும் இழந்த உங்களுக்கு, தேவனே சகலத்தையும் பொறுப்பேற்று நடத்துவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.



எனவே ஜெனி, நீங்கள் சோர்ந்து போகவும் வேண்டாம், என் நிலமை இப்படி மாறி விட்டதே என்று தளர்ந்து போகவும் வேண்டாம். நம்பிக்கையில்லாதவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை கொடுக்கவே இயேசு உலகத்தில் வந்தார். என் வாழ்க்கை சூனியமாகி விட்டதே, இனி என் வாழ்வில் ஒளியும் இல்லை, நன்மையும் இல்லை என்று உடைந்து போன உங்கள் வாழ்க்கையில் ஒளி ஏற்ற இயேசு இருக்கிறார்.

இயேசுவை நீங்கள் இறுகப் பிடித்துக் கொள்ளும் போது, அவர் உங்கள் நம்பிக்கையற்ற வாழ்க்கையை நம்பிக்கையுள்ளதாக மாற்ற முடியும். உங்கள் கசந்து போன வாழ்க்கையை மறுபடியும் மதுரமாக மாற்ற முடியும்.

இந்த சூழ்நிலையிலும் நீங்கள் தொடர்ந்து பயணிக்க தேவன் உதவி செய்வார். உங்கள் இரண்டு பேருடைய வாழ்க்கையையும் இயேசு உயர்த்துவார். பிறருக்கு உதவின நானே, இன்று கையேந்தி நிற்கின்றேனே என்று உருக்குலைந்து விட வேண்டாம். ஏந்தி நின்ற கைகளை, மறுபடியும் கொடுக்கும் கரங்களாக மாற்ற இயேசுவால் முடியும்.

உங்களைப் போல ஓர் வாலிப மகள் செல்வ செழிப்பாய் வாழ்ந்து, பின்னர் பெற்றோரை இழந்து, விடுதியில் படித்து முடித்து, ஒரு தொழிற்சாலையை நிறுவி, இன்றைக்கு சாதனையாளராக வலம் வந்துக் கொண்டிருக்கிறார். அவர் சோர்ந்து போகாமல், தங்களுக்கு விடுதியில் கிடைத்த இயேசுவின் நல்ல போதனைகளைக் கேட்டு, விசுவாசித்து, இயேசு எனக்கு துணையாக இருப்பார் என்று சோர்விலிருந்து வெளியே வந்து சாதித்துக் காட்ட வேண்டும் என்று நம்பிக்கையுடன் செயல்பட்டார்கள்.

ஜெனி, நீங்களும் அதே விசுவாசத்தைப் பயன்படுத்தி, நன்கு படித்து முடித்து உங்கள் கனவான கம்பெனியை உருவாக்கி அநேகரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த இயேசு உங்களுக்கு உதவி செய்ய முடியும்.

இப்பொழுது நீங்கள் சோர்ந்து போய், மூலையில் உட்கார போகிறீர்களா? அல்லது மறுபடியும் எழுந்து, விசுவாசத்தில் பெலப்பட்டு, இயேசுவின் கிருபையோடு உங்கள் கனவை நனவாக்க தொடர்ந்து செயல்பட போகிறீர்களா?




- **நீங்கள் இருக்கும் அந்த கிறிஸ்தவ விடுதியில், தொடர்ந்து ஜெபத்தோடும், விசுவாசத்தோடும் படிக்க முயலுங்கள்.**
- **சோர்வுகள் வரும் போது அவற்றை மேற்கொள்ள பல சாட்சிகளைக் கேட்க முயலுங்கள். வேதத்தை வாசிக்க ஆரம்பியுங்கள். உங்கள் விசுவாசம் பெலப்படும், ஒரு புதிய நம்பிக்கை உண்டாகும்.**
- **ஒவ்வொரு வாரமும் தவறாமல் ஆலயத்திற்குப் போக வேண்டும் என்று தீர்மானியுங்கள்.**
- **'எனக்கு ஏன் இப்படி நேர்ந்தது' என்று தோன்றும் போது, இயேசு என்னை நேசிக்கிறார், என் வாழ்வில் ஒருபோதும் தவறு செய்ய மாட்டார், என்னை கைவிடமாட்டார் என்று அடிக்கடி சொல்லி உங்களை நீங்களே பெலப்படுத்த வேண்டும்.**
- **'என்னை பெலப்படுத்தும் இயேசுவினால் எல்லாம் செய்ய எனக்கு பெலனுண்டு' ( பிலி. 4:13) என்ற வசனத்தின்படி நம்பிக்கையோடு செயல்படுங்கள்!**

*ஜெனி உங்களுக்கு என் அன்பின் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!*

முகப்பு செய்தி: சதீஷ்



# தேவன் பட்சபாதமற்றவர்!

உலகில் வாழும் ஜனங்களில் சிலர் மாளிகை போன்ற வீடுகளிலும், சிலர் குடிசைகளிலும், பலர் சாதாரண குடியிருப்புகளிலும் வாழ்ந்து வருகின்றனர். இதில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், செல்வந்தர்கள், ஏழைகள், ஞானிகள், மூடர்கள், துன்மார்க்கர்கள், சன்மார்க்கர்கள் என்று இவர்களின் வாழ்வின் முறையும், வாழ்வின் தரங்களும் வேறுபட்டு இருந்தாலும் இவர்கள் எல்லோரும் இந்தப் பூமியில் பிறந்து, வாழ்ந்து இந்த உலகத்தை விட்டு யாவரும் ஒரு நாள் கடந்து செல்ல வேண்டும் என்பது தேவ நியதி. ஆனால் ஆண்டவர் இவர்கள் எல்லோர் மேலும் **“...தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்” (மத். 5:45)** என்பதைப் பார்க்கும் போது பட்சபாதமில்லாத கர்த்தருடைய அன்பு வெளிப்படுகிறது.



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு குறிப்பிட்ட இனத்திற்காகவோ அல்லது குறிப்பிட்ட மதத்தை ஸ்தாபிக்கவோ இந்தப் பூமியில் வந்து பிறக்கவில்லை. இந்தப் பூமியில் பாவம் செய்து தன் வாழ்வைக் கெடுத்துக் கொண்ட ஒவ்வொரு மனிதனையும் மீட்கவே அவர் பூமியில் மனிதனாக வந்து பிறந்தார். ஒரு இராஜாவின் உள்ளத்தில் தீராத சந்தேகம் ஒன்று இருந்தது. அது என்னவென்றால், மனிதனை மீட்க இயேசு ஏன் வர வேண்டும்? அவர் சர்வத்தையும் படைத்தவர் ஆயிற்றே! மனிதனை மீட்க ஒரு தேவ தூதனை அனுப்பி இருக்கலாமே! அவர் ஏன் வந்தார்? என்று அவருக்குள் இருந்த கேள்வியை தன்னுடைய மந்திரியாரிடம் கேட்டார். மந்திரி இரவு முழுவதும் நன்கு யோசித்துப் பார்த்து விட்டு இறுதியாக ஒரு முடிவு எடுத்தார். அடுத்த நாள் இராஜாவின் அரண்மனைக்கு சென்று இராஜாவே மனிதனை மீட்க இயேசு ஏன் வர வேண்டும் என்று நீங்கள் கேட்ட கேள்விக்கு விடையை கண்டுபிடித்து

விட்டேன் என்றார். வாருங்கள், நாம் அரண்மனையை விட்டு அக்கரைக்குச் செல்வோம் என்று சொல்லி இராஜாவுடன் அவருடைய மகன் மற்றும் போர்ச் சேவகர்கள் என்று பெரும் கூட்டத்துடன் ஆற்றைக் கடக்க முற்பட்ட போது, இராஜா சற்றும் எதிர்பாராத நேரத்தில் அவருடைய மகனை மந்திரி ஆற்றில் தள்ளினார். இதைப் பார்த்த இராஜா சற்றும் யோசிக்காமல் ஆற்றில் குதித்து தன் மகனைக் காப்பாற்றினார். வெளியே வந்தவர் மந்திரியிடம் கோபத்துடன், ஏன் என் மகனை ஆற்றில் தள்ளினீர் என்றார். உடனே மந்திரி உங்கள் மகன் ஆற்றில் விழுந்த போது ''அவனை காப்பாற்றுங்கள்'' என்று கட்டளை கொடுத்தால் காப்பாற்றுவதற்கு நான் இருக்கிறேன், போர்ச் சேவகர்கள் இருக்கிறார்கள். இவை எல்லாம் இருந்தும் நீங்கள் ஏன் ஆற்றில் குதித்தீர்கள்? என்றார். ''நான் அவன் மீது அளவற்ற அன்பு வைத்தபடியால் யாரையும் எதிர்பார்க்காமல் நானே ஆற்றில் குதித்து என் மகனைக் காப்பாற்றினேன்'' என்றார் இராஜா.



உடனே மந்திரி ராஜாவை நோக்கி, ''இராஜாவே அதுபோல தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், பாவத்திலும், சாபத்திலும், பிசாசின் பிடியிலும் சிக்கித் தவித்து மரணத்திற்கு நேராக ஓடிக்கொண்டிருந்த தம்முடைய பிள்ளைகளை மீட்கத் தன்னுடைய தூதர்களை அனுப்பாமல் அவரே மனுஷகுமாரனாக இந்த பூமிக்கு வந்தார். அதுமட்டுமல்லாமல் அவர் பட்சபாதம் பண்ணுகிறவர் அல்ல. அதினால் தான் பணக்காரன், ஏழை, அடிமை, எஜமான், நல்லவர், தீயவர், ஆண், பெண், வெள்ளை, கருப்பு என எந்த பாரபட்சமும் பார்க்காமல் மனிதன் மீது அவர் மிகுந்த அன்பு வைத்தபடியினால் அவனை மீட்கத் தாமே வந்து ஜீவபலியானார்'' என்றான்.

இப்படி இயேசு மனுஷர்களை வேறுபடுத்திப் பார்க்காமல் எல்லாரிடமும் ஒரேவிதமான அன்பு காட்டுவது போல நாமும் இந்த பண்டிகை நாட்களில் நம்மைச் சுற்றியுள்ள ஜனங்கள், ஏழை எளிய மற்றும் பலவீனமான மக்கள் என்று ஒருவரையும் புறப்பே தள்ளாமல் கிறிஸ்துவின் அன்பை வெளிப்படுத்துவோம். **“மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்” (மத். 7:12).** இயேசுவின் பிறப்பின் செய்தி ''உன்னைப் போல் பிறரையும் நேசி'' என்ற பிரதான கற்பனையை நமக்கு வெளிப்படுத்துகிறது. தன்னைத் தானே நேசிக்காத ஒரு மனிதனும் இந்தப் பூமியில் இருக்க மாட்டான். தன்னையும் தன் குடும்பத்தையும் ஒருவன் எப்படி பட்சபாதம் பார்க்காமல் நேசிப்பானோ, அதேபோல் நம்முடன் படிக்கும் நண்பர்கள், நமக்கு கீழ் வேலை செய்யும் வேலையாட்கள், நமக்கு எதிரானோர் மீது பட்சபாதமின்றி அன்புகூர்ந்து நன்மை செய்ய வேண்டும் என்பதுதான் இயேசுவின் பிறப்பின் நற்செய்தி.

இயேசுவிடம் குற்றம் கண்டு பிடிக்கும்படி விபச்சார பாவத்தில் ஈடுபட்ட ஒரு ஸ்திரீயை அவரிடத்தில் அழைத்து வந்த போது, அந்த ஸ்திரீயின் உள்ளத்தில், இவர் கட்டாயம் என்னை தண்டிப்பார் என்ற எண்ணம் இருந்திருக்கும். ஆனால் இயேசு அந்த ஸ்திரீயை பாவி என்று பட்சபாதம் பார்க்காமல் நேசித்தப்படியால் அவளை ஆக்கினைக்குள்ளாக தீர்க்காமல் விடுதலையாக்கினார்.

**எனக்கன்பான வாலிபர்களே! “தேவனிடத்தில் பட்சபாதமில்லை” (ரோமர் 2:11). கிறிஸ்து நம்மை எப்படி நடத்துகிறாரோ அப்படியே நாமும் மற்றவர்களை நடத்த வேண்டும் என்று கிறிஸ்து பிறப்பின் செய்தி நமக்கு தெரிவிக்கிறது. எனவே நாம் நம்மை சுற்றி இருக்கும் ஜனங்களின் மீது பட்சபாதம் பார்க்காமல் தேவனுடைய அன்பை வெளிப்படுத்தி கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடுவோம்.**

சாதனை: சுமா




# பொன்னான நிமிடங்கள்...

**அன்பான இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் உங்கள் இலட்சியத்திற்காக கடினமாக உழைத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என முழு நிச்சயமாய் நம்புகின்றேன். இந்த உலகத்தில் நாம் வாழும் ஒவ்வொரு நிமிடமும் நாம் சாதிக்கக் கொடுக்கப்பட்ட பொன்னான நிமிடங்கள். அந்தப் பொன்னான நிமிடங்களை சாதனையின் களங்களாக மாற்றும்படி உங்களை ஊக்குவிக்க ஒரு சாதனையாளரின் வாழ்க்கை உங்களுக்காக.**

தேஜஸ்வின் சங்கர் டெல்லியில் பிறந்தார். தன்னுடைய சிறுவயதில் இருந்தே கிரிக்கெட் மீது இருந்த அதீத ஆர்வத்தினால் அதில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினார். ஆனால், தேஜஸ்வினைப் பார்த்த பள்ளி உடற்கல்வி ஆசிரியர், இவரிடம் வேறொரு திறமை இருப்பதை அறிந்து தேஜஸ்வினிடம், இனி கிரிக்கெட்டில் கவனம் செலுத்துவதை விட உயரம் தாண்டுதலில் அதிக கவனம் செலுத்துமாறு அறிவுரை கூறி உயரம் தாண்டுதலில் பயிற்சி செய்ய அவரை உற்சாகப்படுத்தினார்.

பள்ளி உடற்கல்வி ஆசிரியரின் உற்சாகம் தேஜஸ்வினின் வாழ்க்கையை மாற்றியது. உயரம் தாண்டுதலில் சாதிக்க வேண்டும் என்ற மனஉறுதியை அவருக்குத் தந்தது. இந்த நிலையில் தேஜஸ்வினின் 14ம் வயதில் அவருடைய தந்தை கொடிதான இரத்தப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தார். தந்தையின் இறப்பு அவரை மிகவும் பாதித்தது. இறக்கும் தருவாயில் இருந்த தகப்பனிடம் தான் கண்டிப்பாக விளையாட்டில் சாதிப்பதாக உறுதியளித்தார். உறுதியளித்தது மட்டுமல்லாமல் அதற்காக உழைக்கவும் ஆரம்பித்தார்.

2013ல் டெல்லி மாநில தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தேஜஸ்வின் பங்கேற்று வெண்கலப் பதக்கம் பெற்றார். தன்டைய ஒவ்வொரு நிமிடத்தையும் பொன்னான நிமிடங்களாக மாற்றி சாதனைப் பயணத்தைத் தொடங்கினார்.

2015ஆம் ஆண்டு அப்பியாவில் நடைபெற்ற காமன்வெல்த் இளைஞர் விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார். 2016ஆம் ஆண்டு கவுஹாத்தியில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப்



போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். கோல்ட் கோஸ்டில் நடந்த 2018 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஆறாவது இடத்தைப் பிடித்து அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார். இன்று இளம் சாதனையாளராக வலம் வந்துக் கொண்டிருக்கிறார்.

**இதை வாசிக்கும் இளம் வாலிபர்களே! தேஜஸ்வின் பிறக்கும் போதே சாதனையாளராகப் பிறக்கவில்லை. அவருடைய ஆசையும், விடாமுயற்சியும் அவரை வெற்றியுள்ள உயரம் தாண்டும் வீராக மாற்றியது. உலகில் யாரும் சாதனையாளராகப் பிறப்பதில்லை. வளரும் போது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்தால் கண்டிப்பாக உலகம் கண்டு வியக்கும் சாதனையாளராக உருவாக முடியும். ஓரிரு முறை தோல்வியைக் கண்டவுடன் என்னால் சாதிக்க முடியவில்லை என்று துவள வேண்டாம். கடினமாக உழையுங்கள், எந்த நேரத்திலும் நீங்கள் சாதனையாளராக உருவாகலாம். சாதிக்க தூண்டும் பொன்னான நிமிடங்கள் உங்கள் கையில்!!!**




# மூணாறில் வாலிபர் எழுப்புதல் கூடுகை

இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் மூலமாக அக்டோபர் 29ஆம் தேதி கேரளா மாநிலம் மூணாறில் வாலிபர் எழுப்புதல் கூடுகை நடைபெற்றதால் நூற்றுக்கணக்கான வாலிபர்கள் கலந்துகொண்டு தங்கள் மாநிலத்தின் எழுப்புதலுக்காக ஜெபித்தார்கள். வந்திருந்த அநேக வாலிபர்கள் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டதோடு, எழுப்புதலின் தரிசனத்தைப் பெற்றுச் சென்றனர். கர்த்தர் ஊழியர்களை வல்லமையாக பயன்படுத்தினார். தங்கள் மாவட்டத்தில் சுவிசேஷம் அறிவிக்க 13,000 கைப்பிரதிகளை வாங்கிச் சென்றனர். தேவனுக்கே மகிமை!



# நன்மை செய்யுங்கள்!

Merry Christmas







செய்தி: மோகன் சி. லாசரஸ்

அவன் (கொர்நெலியு) தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தானதருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான் (அப் .10:2). கொர்நெலியு என்ற நூற்றுக்கதிபதிக்கு உண்மை தெய்வம் யாரென்று தெரியாவிட்டாலும், தெய்வம் என்று ஒருவர் இருக்கிறார், அந்த தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து பயத்தோடு நடக்க வேண்டும் என்று அறிந்து நடந்தான். தெய்வபயத்தோடு அவன் ஏழை, எளிய மக்களுக்கு மிகுந்த தான தர்மங்களையும் செய்து வந்தான். தேவதூதன் வந்து கொர்நெலியுவோடு பிரத்தியட்சமாக பேசி, “உன் ஜெபங்களும், உன் தர்மங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்து எட்டி இருக்கிறது” என்று சொன்னார். நாம் மற்றவர்களுக்கு உதவி செய்யும் போது அது பரலோகத்தில் தேவனுக்கு முன்பாகப் போய் நிற்கிறது. ஆகவே நன்மை செய்யவும் தானதர்மம் செய்யவும் நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

## ஏன் நன்மை செய்ய வேண்டும்?

### தேவ கட்டளை

**“தேசத்திலே எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் தேசத்திலே சிறுமைப்பட்டவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் தாராளமாய்த் திறக்க வேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்”** (உபா. 15:11). எளியவர்களுக்கு உதவ வேண்டும், தாராளமாய் கையைத் திறந்து உன் சகோதரனுக்கு உதவி செய்ய வேண்டும் என்று தேவன் கட்டளையிடுகிறார். நீதிமொழிகள் 17:5ஐ வாசிக்கும் பொழுது, ஒரு ஏழையை அவமானப்படுத்தி, அசட்டைபண்ணும்போது, நீங்கள் அவனை உண்டாக்கின ஆண்டவரையே நிந்திக்கிறதாக வேதம் சொல்லுகிறது. எளியவர்களை அற்பமாக எண்ணக்கூடாது. ஏனென்றால் ஆண்டவர் ஏழைகள் மீதும், எளியவர்கள் மீதும் கரிசனையும், அக்கறையும் உள்ளவராக இருக்கிறபடியினால்தான் இந்தக் கட்டளையை எழுதி வைத்திருக்கிறார்.

### கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான் (நீதி 19:17). மனுஷனுக்கு மனுஷன் கடன் கொடுக்கலாம். ஆனால் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவனே நமக்கு கடன்காரராய் மாறுகிற ஒரு சிலாக்கியத்தை ஆண்டவர் நமக்கு தருகிறார். ஏழைக்கு கொடுக்கும் போது கர்த்தருக்கே கடன் கொடுக்கிறீர்கள் என்பதாய் சொல்கிறார்.

தசமபாகம் அல்லது காணிக்கையை சபைக்கோ, ஊழியத்திற்கோ கொடுப்பதைத் தான் கர்த்தருக்குக் கொடுக்கிறோம் என்று அநேகர் நினைக்கிறார்கள். அப்படியல்ல, ஒரு ஏழைக்கு கொடுக்கும் போது, ஒரு விதவைக்கு உதவி செய்யும்போது, ஒரு தகப்பன் இல்லாத பிள்ளைக்கு உதவி செய்யும் போது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை செய்யும்போது கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறீர்கள். ஏழைகளுக்கு நீங்கள் கொடுப்பதை கர்த்தர் உங்களுக்குத் திரும்ப கொடுப்பார்.

## யாருக்கு நன்மை செய்ய வேண்டும்?

**“நன்மை செய்ய திராணியிருக்கும்போது, அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே”** (நீதி 3:27). எல்லோருக்கும் செய் என்று சொல்லவில்லை. செய்யத்தக்கவர்களுக்கு செய்ய வேண்டும் என்று தான் வேதம் சொல்கிறது.

ஒருநாள் இரண்டு கைகளுமே இல்லாத ஒரு சகோதரர் வந்தார். அவரைப் பார்த்தால் யாருக்குமே மனதுருக்கம் வரும். ஆனால் எனக்கு அவர் மேல் இரக்கமே வரவில்லை. ‘‘என் மகளுக்கு திருமணம் வைத்திருக்கிறேன், எந்த வேலையும் என்னால் செய்ய முடியாது, திருமணத்திற்கு வருகிறவர்களுக்கு சாப்பாடு போட வேண்டும், அதற்கு காசு இல்லை என்று சொல்லி அழுதார். அவருக்கு உதவ வேண்டும் என்ற ஏவுதல் எனக்குள் வரவே இல்லை. ஆண்டவர் கொடுக்க வேண்டுமென்ற ஏவுதலை எனக்குக் கொடுக்காததால், திருமண தினத்தன்று உங்களுக்கு பணம் வரும், உங்களுடைய முகவரியைக் கொடுத்து விட்டு தைரியமாகப் போங்கள் என்று சொல்லி அனுப்பி வைத்தேன்.



ஊழியத்தில் உள்ள ஒரு சகோதரனிடம் பணத்தைக் கொடுத்து அவரைக் குறித்து விசாரித்தப்பின் பணத்தைக் கொடுங்கள் என்று சொல்லி அனுப்பினேன். அவரின் கிராமத்தில் சென்று விசாரித்தபோது, ‘‘அவருடைய பிள்ளைகளுக்கு திருமணம் முடிந்து எத்தனையோ வருடங்கள் ஆகிவிட்டதே, அவருடைய வீட்டில் இன்றைக்கு திருமணம் எதுவும் கிடையாதே’ என்று சொன்னார்கள். ஏமாற்றி பணம் வாங்குவதற்கு வந்ததை தேவன் அறிந்திருந்தபடியினால் தான் ஆண்டவர் என் இருதயத்தை அடைத்துவிட்டார். அதனால்தான் அவர் மேல் எனக்கு இரக்கமே வரவில்லை. ஏமாற்றுகிறவர்களுக்கு நன்மை செய்யாமல், செய்யத்தக்கவர்களுக்கு செய்ய வேண்டும் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

## விசுவாச குடும்பத்தாருக்கு செய்யுங்கள்

**“ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம்”** (கலா 6:10). ஜாதி மத வித்தியாசம் பார்க்காமல், யாராயிருந்தாலும் அவர்களுக்கு தேவை இருக்கிறதா என்று பார்த்து உதவி செய்யுங்கள். விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மை செய்ய வேண்டுமென்று வேதம் நமக்கு சொல்லுகிறது. இயேசுவை அறியாத குடும்பத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு வந்திருப்போருக்கு, ஒரு கஷ்டம் என்றால் அவர்களுக்குக் கட்டாயம் உதவி செய்ய வேண்டும். ஒரு விசுவாசிக்கு உதவி செய்ய யாரும் இல்லாமல் இருக்கும்போது அவர்களுக்கு நன்மை செய்யாமல் இருப்போமானால் அது பாவம்.

## தேவ ஊழியர்களுக்கு செய்யுங்கள்

**“...திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்”** (கலா 6:6). யார் மூலமாய் வசனத்தைக் கேட்டு ஆசீர்வதிக்கப்படுகிறீர்களோ, அந்த வசனத்தை போதிக்கிறவர்களுக்கு நன்மைகளைப் பகிர்ந்து கொடுக்க வேண்டும். ஊழியர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று வேதம் சொல்கிறது. உங்கள் கிராமத்தில், பட்டணத்தில் கிராமம் கிராமமாக சென்று சுவிசேஷம் அறிவிப்பவர்கள், கைப்பிரதி ஊழியம் செய்கிறவர்கள், நடந்து ஊழியம் செய்கிறவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்கலாம், ஒருவேளை உணவு கொடுக்கலாம், ஒரு உடை வாங்கிக் கொடுத்து அவர்களை ஊழியத்தில் உற்சாகப்படுத்தலாம். வசனத்தை உங்களுக்கு போதிக்கும் போதகர்களுக்கு நன்மையைப் பகிர்ந்து கொடுங்கள். கர்த்தருடைய ஊழியர்களை சாரிபாத் விதவையைப் போல் உபசரித்துப் பாருங்கள். கர்த்தர் உங்களை அளவில்லாமல் ஆசிர்வதிப்பார். **“...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்”** (மத். 25:40).

**அன்பான வாலிபர்களே! கடன் வாங்காமல், உங்கள் கையில் உள்ளதிலிருந்து ஒரு பங்கை உங்கள் சபையில் அல்லது உங்களுக்குத் தெரிந்த ஊழியர்கள், மிஷனெரிகள், உங்களோடு படிக்கும் சக மாணவர்களின் படிப்பிற்கு, ரோட்டோரத்தில் இருக்கும் ஏழை, எளிய மக்களுக்கு உங்களால் இயன்ற உதவிகளை செய்து இந்த கிறிஸ்து பிறப்பின் மாதத்தில் நன்மை செய்து, இயேசு கிறிஸ்து கொடுக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்! ஆமென்!**



வேதாகம கதாபாத்திரம்: பெனிட்டா

# சிம்சோன்

## இஸ்ரவேலின் 13வது நியாயாதிபதி

வாசிக்க நியா. 13-16 அதிகாரங்கள்

### அறிமுகம்

சிம்சோன் என்றால் சூரியனுக்குச் சமமானவன், திடமானவன் அல்லது பலமானவன் என்று பொருள். இவன் பழைய ஏற்பாட்டில் மிகுந்த புகழ்பெற்ற மனிதர்களுள் ஒருவனாக இருந்தான். இவன் தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானான மனோவாவின் குமாரன். சிம்சோனுடைய பிறப்பு அவன் பெற்றோர்களுக்கு அற்புதமான விதமாக தெரிவிக்கப்பட்டது. (நியா: 13)

### சிறப்பம்சங்கள்:

- 300 நரிகளைப் பிடித்துத் தீப்பந்தங்களை எடுத்து வாலோடு வால் சேர்த்து பெலிஸ்தியரின் வெள்ளாண்மையையும், திராட்சைத் தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும் சுட்டெரித்துப் போட்டான்.
- ஒரு கழுதையின் பச்சைத் தாடை எலும்பினால் 1000 பேரைக் கொன்றான்.
- ஆட்டுக்குட்டியைக் கிழித்துப் போடுவதுபோல் வெறும் கைகளாலேயே ஒரு பாலசிங்கத்தைக் கிழித்துப் போட்டான்.
- வேதாகமத்தில் சிங்கத்தைக் கொன்ற முதல் மனிதன் சிம்சோன்.
- பிறந்ததிலிருந்து தேவனுக்கென்று நசரேயனாக அர்ப்பணிக்கப்பட்டவன்.
- அளவிடமுடியாத சரீர பலமுள்ளவனாயிருந்தான். அதை தேவனுக்காகவும், அவன் சொந்த மகிமைக்காகவும் உபயோகப்படுத்தினான்.
- அவன் பிறக்கும் முன்னால் அவன் பெற்றோர்களைச் சந்தித்த தேவதூதனின் அறிவிப்பின்படி, சிம்சோன் தேவனின் நோக்கத்தை நிறைவேற்றினான்.
- அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்தான்.
- அவன் பெலிஸ்தரின் கொடுமையிலிருந்து இஸ்ரவேலரை விடுவித்தவர்களில் உயர்ந்தவனாயிருந்தான்.
- பெலிஸ்தியரின் நாட்களில் இஸ்ரவேலை 20 ஆண்டுகள் நியாயம் விசாரித்தான்.

### பெலவீனங்கள்

- சிம்சோன் அநேக சமயங்களில் பிரமாணத்தையும், தேவனின் சட்டத்தையும் மீறினான்.
- விருத்தசேதனமில்லாத பெலிஸ்தர்களிடம் உறவு வைத்துக்கொண்டு, அதினால் அநேக பிரச்சனைகளை எதிர்கொண்டான்.
- தனது திறமைகளை விவேகமில்லாமல் உபயோகித்தான்.
- திராட்சைப் பழங்களை விட்டு தூரமாக இருக்க வேண்டியவன் திராட்சைத் தோட்டத்துக்குள் சென்றான்.
- வேசியிடம் சென்று தன்னைத் தீட்டுப்படுத்திக்கொண்டான்.
- மரித்த சடலத்தின் அருகில் செல்லவே அவனுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தபோது, செத்த சிங்கத்தின் உடம்பிலிருந்து தேனை தன் கைகளால் எடுத்து தானும் சாப்பிட்டு தன் பெற்றோருக்கும் கொடுத்தான்.
- தெலீலாள் என்ற அந்நிய ஸ்திரீயுடன் சிநேகம் கொண்டு, அவன் பலத்தின் ரகசியத்தை அவளுக்கு வெளிப்படுத்தினதினால் அவன் தலை மயிர் சிரைக்கப்பட்டு, அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று.
- அழைக்கப்பட்ட நோக்கத்தை மறந்து சிற்றின்பப் பிரியனாகவும், தேவனின் கட்டளையை மீறுகிறவனாகவும் மாறிப் போனான்.
- பெற்றோரின் வார்த்தைகளை உதாசீனம் செய்தான்.



# கிறிஸ்மஸ் பரிசு

டிசம்பர் மாதம் வந்தாலே பட்ஜெட் போட்டு என்ன பரிசு பொருட்கள் வாங்கலாம் என்று யோசித்து, வாங்க ஆயத்தமாகிக் கொண்டு இருப்பீர்கள். இயேசு கிறிஸ்து பிறந்த போது, மூன்று சாஸ்திரிகள் விலையுயர்ந்த பரிசுப் பொருட்களுடன் அவரைப் பார்க்கச் சென்றனர். அவருக்குக் கொடுக்கப்பட்ட அந்த விலையுயர்ந்த பரிசு பொருட்கள் என்ன? எதற்காக விலை உயர்ந்த பரிசுகள் கொடுக்கப்பட்டன?

### பொன் (ஒரு இராஜாவுக்கு ஏற்ற பரிசு)

இராஜா பிறந்திருக்கிறார் என்ற நற்செய்தியைக் கேட்டு, இயேசுவுக்கு விலையுயர்ந்த பொன்னைப் பரிசாகக் கொண்டு வந்தனர். ஏன் பொன்னை இயேசுவுக்கு பரிசாகக் கொடுக்க வேண்டும்? பொன் ஒரு விலைமதிப்பற்ற பொருள்! இயேசு கிறிஸ்து மனிதனாக பிறந்தாலும், அவர் உலகத்தை ஆளுகிற இராஜாவாகப் போகிறார் என்பதால் இராஜாவிற்கு ஏற்ற பரிசைக் கொடுத்து அவரைக் கனப்படுத்தியிருக்கலாம்.

இன்றைக்கு நீங்கள் இராஜாதி இராஜாவாக வீற்றிருக்கும் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் நாளில் அவருக்கு என்ன பரிசு கொடுக்கப் போகிறீர்கள்? அவர் உங்களிடம் பொன்னையோ, பொருளையோ எதிர்பார்க்கவில்லை. அவர் உங்களுடைய இருதயத்தை மட்டுமே எதிர்பார்த்து நிற்கிறார். அதை அவருக்கு முழுமையாக கொடுக்க ஆயத்தமா?

### தூபவர்க்கம் (ஒரு பிரதான ஆசாரியனுக்கு ஏற்ற பரிசு)

தூபவர்க்கம் என்பது ஒரு வாசனை மிகுந்த பிசின். இதைத்தான் இயேசு கிறிஸ்துவுக்கு சாஸ்திரிகள் காணிக்கையாக கொடுத்தனர் (மத்தேயு 2: 11). இயேசுவை ஒரு பிரதான ஆசாரியனாக கருதி, இந்தப் பரிசு கொடுக்கப்பட்டிருக்கலாம். இயேசு தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி, அதினால் நம்மைக் கழுவி இரட்சித்து அவருடையப் பிள்ளையாக மாற்றியிருக்கிறார். அவருடைய இரத்தத்தால் சம்பாதித்துக் கொடுத்த இரட்சிப்பை நாம் இழக்காமல் காத்துக் கொள்ள நமக்காகப் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

இன்றைக்கு இந்த விலையேறப்பெற்ற இரட்சிப்பைப் பெற்றுக் கொண்ட நீங்களும் ஜெபம் என்னும் தூபவர்க்கத்தை தினந்தோறும் அவருக்கு பரிசாகக் கொடுக்க ஆயத்தமா?

### வெள்ளைப்போளம் (மரிக்கப் போகும் ஒருவருக்கு ஏற்ற பரிசு)

இதுவும் ஒருவகையான வாசனைத் திரவியம் தான். ஆனால் இறந்தவர்களை புதைக்கும் போது அவர்களது உடலில் தடவப்படும் வாசனை திரவியம். சரி, பிறந்த குழந்தைக்கு ஏன் வெள்ளைப்போளத்தைப் பரிசாகக் கொடுத்தார்கள் என்று நீங்கள் யோசிக்கலாம்! இயேசு கிறிஸ்து மக்களுக்காக தன்னுயிரை கொடுப்பார் என்பதை சாஸ்திரிகள் முன்னரே அறிந்திருந்ததால், வெள்ளைப்போளத்தைப் பரிசாகக் கொடுத்திருக்கலாம். மரணத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற இரட்சிப்பை பெற்றுக் கொண்டீர்களா? இல்லையென்றால் உங்களுக்காக சிலுவையில் அவர் சிந்திய இரத்தம் அனைத்தும் வீணாகப் போய்விடும்.

**எனவே, இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னுடைய உயிரைக் கொடுத்து உங்களை மீட்டெடுத்த அந்த அன்பின் இரட்சிப்பை உங்கள் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல ஆயத்தமா?**

## ஈசாக்கு – ரெபேக்காள்

### தங்கள் பிள்ளைகளிடம் பட்சபாதம் பார்த்தார்கள்



ரெபேக்காள் தன் இளைய மகனான யாக்கோபை அதிகம் நேசித்தாள். ஈசாக்கு ஒருதலைப் பட்சமாக தன் மூத்த குமாரனாகிய ஏசாவை நேசித்து அவனை ஆசிர்வதிக்க நினைத்தார். ரெபேக்காள் யாக்கோபின்மேல் அதிக அன்பு வைத்திருந்ததால் மூத்த மகனான ஏசாவை ஏமாற்றி இரண்டு ஆசீர்வாதங்களை யாக்கோபுக்குப் பெற்றுக் கொடுத்தாள். இதையறிந்த ஏசா, தன் தாயும் தன் சகோதரனும் தன்னை ஏமாற்றியதால் தன் தம்பியைக் கொலை செய்ய முடிவெடுத்தான். இதனால் ரெபேக்காள் யாக்கோபை ஆரானிலுள்ள தன் சகோதரனாகிய லாபானிடத்திற்கு அனுப்புகிறாள். ஏசாவும் வீட்டை விட்டு வெளியேறுகிறான். யாக்கோபு மறுபடியும் தன் தாயைப் பார்த்ததாக வேதாகமத்தில் எழுதப்படவில்லை. இரண்டு பிள்ளைகளும் பெற்றோரின் அருகில் இல்லை. பட்சபாதம் பார்த்ததினால் ஈசாக்கும் ரெபேக்காளும் தங்கள் பிள்ளைகள் தங்களை விட்டுப் பிரிந்து போக வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டனர் (ஆதியாகமம் 27ம் அதிகாரம்).

அன்பான வாலிபர்களே! பொய், ஏமாற்று செய்ததினால் ரெபெக்காளுக்கு என்ன நன்மை கிடைத்தது? பிள்ளைகளுக்குள் பிரிவினை, கொலை வெறி என்று குடும்பமே சிதறியது. அவள் விதைத்தப் பட்சபாதம் என்ற விதை முளைத்து மரமாக வளர்ந்து விரோதம் என்ற கனியைக் கொடுத்தது. இன்றைக்கு நீங்களும் பட்சபாதம் பார்க்கிறீர்களா?

சிந்தனை சிதறல்: பெனிட்டா

## திராட்சத்தோட்ட வீட்டெஜமான்

### தன் வேலைக்காரர்களிடம் பட்சபாதம் பார்க்கவில்லை



அதிகாலையில் புறப்பட்ட வீட்டெஜமான் தன்னுடைய திராட்சத் தோட்டத்திற்கு வேலையாட்களை நாள் ஒன்றுக்கு ஒரு பணம் கூலி பேசி தோட்டத்திற்கு அனுப்பினான். மூன்றாம் மணி வேளையிலும் ஆறாம் மணி வேளையிலும் ஒன்பதாம் மணி வேளையிலும் பதினோராம் மணி வேளையிலும் 'எங்களுக்கு வேலையில்லை' என்று சொன்ன அனைவரையும் நியாயமான கூலி பேசி வேலையில் அமர்த்தினான். வேலை முடிந்த பின்பு எல்லோருக்கும் சமமாய் ஒரு பணம் கூலி கொடுத்தான். அதனைக்கண்டு, அதிகாலையிலிருந்து வேலை செய்தவர்கள் அதிருப்தி அடைந்து முறுமுறுத்தார்கள். அதற்கு வீட்டெஜமான் ''சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ்செய்யவில்லை; நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போ, உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்தி வந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம்'' என்று அனைவருக்கும் சமமாக ஒரு பணம் கூலி கொடுத்து அனுப்பினான் (மத்தேயு 20:1- 16).

அன்பான வாலிபர்களே! பட்சபாதம் இல்லாமல் எல்லோரையும் ஒரே மாதிரியாக பார்த்ததினால்தான் ஒரே கூலியை அந்த வீட்டெஜமான் கொடுத்தார். இன்றைக்கு நீங்களும் கூட நியாயமான முறையில் பட்சபாதமின்றி நடந்து கொள்வீர்களா?



## யாக்கோபு தன் மனைவிகளிடம் பட்சபாதம் காட்டினார்

தன் அண்ணனாகிய ஏசாவுக்கு பயந்து ஓடித் தன் தாயின் சகோதரனாகிய லாபானின் வீட்டிற்குச் சென்று அங்கு அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு அவர்களோடு வாழ்ந்து வந்தான் யாக்கோபு. லாபான் நீ செய்கிற வேலைக்கு எவ்வளவு கூலி வேண்டுமென்று யாக்கோபிடம் கேட்டபோது, லாபானின் இளைய குமாரத்தியாகிய ராகேலை யாக்கோபு நேசித்ததால் அவளை திருமணம் செய்து கொடுக்கும்படி கேட்டான். அவளுக்காக 7 வருடங்கள் ஆடு மேய்க்கவும் சம்மதித்தான். 7 வருடங்கள் முடிந்ததும் லாபான் தன் மூத்த மகளாகிய லேயாளை யாக்கோபுக்கு ஏமாற்றி திருமணம் செய்து கொடுத்தான். இதனை யாக்கோபு அறிந்து கோபம் கொண்டபோது ராகேலையும் அவனுக்கு மனைவியாக லாபான் கொடுத்தான். லேயாள் கூச்சப் பார்வையுடையவளாக இருந்தாள். ராகேலோ பார்வைக்கு அழகானவளாக இருந்தாள். எனவே ராகேலுக்காக மீண்டும் 7 வருடம் வேலை செய்தான். ராகேல் அழகாக இருந்ததினால் யாக்கோபு லேயாளைப் பார்க்கிலும் ராகேலை அதிகமாக நேசித்தான். யாக்கோபு லேயாளிடம் பட்சபாதம் உள்ளவனாக நடந்துகொண்டான். லேயாளைப் பட்சபாதமாக நடத்தினதைக் கர்த்தர் கண்டு அவளை கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். ராகேலோ மலடியாயிருந்தாள் (ஆதி. 29:13-31).

அன்பான வாலிபர்களே! நீங்களும் இன்றைக்கு லேயாளைப் போல சிறுமையின் மத்தியில் இருக்கிறீர்களா? சோர்ந்து போகாதீர்கள்! பொறுமையோடு கர்த்தரை நோக்கி அமர்ந்திருங்கள். தேவன் பட்சபாதம் உள்ளவரல்ல.

## யோசேப்பு தன் சகோதரனுக்கு பட்சபாதம் காட்டினார்



எகிப்தில் ஏழு ஆண்டுகள் கொடிய பஞ்சம் தலைவிரித்தாடிய போது, யோசேப்பின் திட்டமிடலால் தானியக் களஞ்சியம் நிரம்பியிருந்தது. கஜானாவும் நிறைந்து வழிந்தது. யோசேப்பின் தந்தையும் அவரது 11 சகோதரர்களும் வசித்து வந்த கானான் தேசத்தையும் பஞ்சம் தாக்கியதால் அவர்கள் உணவுக்காக எகிப்துக்கு வந்தனர். தங்களால் அடிமையாக விற்கப்பட்ட சகோதரன் யோசேப்புதான் அந்நாட்டின் ஆளுநர் என்பதை அறியாமல் அவர் முன் பணிந்து வணங்கி தானியத்தை வாங்கிச் சென்றனர். தனது சகோதரர்களை அறிந்துகொண்ட யோசேப்பு, தன் அண்ணன் சிமியோனைச் சிறை வைத்துவிட்டு, ''உங்கள் கடைசி தம்பி பென்யமீனை அழைத்து வாருங்கள். அப்போது நீங்கள் அந்நிய நாட்டின் உளவாளிகள் அல்ல என்று நம்புகிறேன்'' என்று கூறியனுப்பினான். சிமியோனை மீட்டுச் செல்லவும் திரும்பவும் தானியம் வாங்கிச் செல்லவும் தனது தம்பி பென்யமீனை அழைத்துக் கொண்டு வந்ததும், பாசத்தால் அவன் மனம் பொங்கியது. யோசேப்பின் மேஜையிலிருந்து போஜனத்தை அவர்களுக்குப் பங்கிட்டு அனுப்பியதில் அவர்கள் எல்லாருடைய பங்குகளைப் பார்க்கிலும் பென்யமீனுடைய பங்கு ஐந்து மடங்கு அதிகமாயிருந்தது. யோசேப்பு தன் மற்ற சகோதரர்கள் எல்லாரையும் விட பென்யமீனை அதிகமாய் நேசித்ததால் தான் அவனுக்கு அதிக பங்கு கொடுத்தான் (ஆதி: 43, 44).

அன்பான வாலிபர்களே! யோசேப்பு தன் தாய் பெற்ற குமாரனாகிய தன் தம்பியின் மேல் பட்சபாதம் வைத்து அதிகமான தானியத்தையும் உணவையும் அவனுக்குக் கொடுத்தான். நீங்களும் யோசேப்பைப் போல பட்சபாதம் பார்க்கிறீர்களா?

# ஜெபக்கையேடு

டிசம்பர் 2023

ஜெபம்: பெனிட்டா

## இஸ்ரவேல் தேசம்

◆ காசாவை சேர்ந்த ஹமாஸ் தீவிரவாத இயக்கம், இஸ்ரவேலில் உள்ள எருசலேமின் மீது 5000 ஏவுகணைகளை அனுப்பி தாக்குதல் நடத்தியுள்ளது.

◆ இந்த தாக்குதலில் இதுவரை சுமார் 1700 பேர் மரித்துள்ளனர். இஸ்ரேல் தாக்குதலால் காசாவில் காயமடைந்த சுமார் 7,900 பேர் சிகிச்சை பெற முடியாமல் தவிக்கின்றனர்.

◆ காசாவில் 34 சுகாதார நிலையங்கள் தாக்கப்பட்டு, 11 சுகாதாரப் பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். காசாவில் இருந்து இதுவரை 3.38 லட்சம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். காசாவில் வசிக்கும் சுமார் 50,000 கர்ப்பிணிகளுக்கு குடிநீர் இல்லை என ஐ. நாவின் உணவு அமைப்பு தெரிவித்துள்ளது.

◆ தீவிரவாதிகளுக்கு எதிராக இஸ்ரவேல் நடத்திய தாக்குதலில் 2500க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

### ஜெபக்குறிப்புகள்

1. இஸ்ரவேல் தேசம் பாதுகாக்கப்படவும், எருசலேம் மற்றும் இஸ்ரவேலெங்கும் சமாதானம் உண்டாகவும் ஜெபியுங்கள். தாக்குதலில் மரணமடைந்துள்ள சுமார் 1700 பேரின் குடும்பங்கள் ஆறுதலடையவும், காயப்பட்டவர்கள் சீக்கிரத்தில் சுகமடையவும் ஜெபியுங்கள்.

2. காசாவிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்படவும், சரியான உணவுகள் வழங்கப்படவும் ஜெபியுங்கள்.

3. உலகின் பல பகுதிகளில் இருந்து செயல்படும் தீவிரவாதிகள் மனம் திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.

4. இஸ்ரவேல் மக்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபியுங்கள்.






## கொலைகள்

◆ படுகொலைகள் அதிகம் நடக்கும் நாடுகளில் இந்தியா எட்டாவது இடத்தில் உள்ளது என அமெரிக்க ஆராய்ச்சி அமைப்பு அறிக்கை கூறுகிறது.

◆ முந்தைய ஆண்டில் இரண்டாவது இடத்தில் இருந்த இந்தியா, தரவரிசையில் சரிவைக் கண்டுள்ளது. இந்தியாவில் ஒவ்வொரு நாளும் சுமார் 82 பேர் கொலை செய்யப்படுவதாகவும், 11 கடத்தல் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும் தேசிய குற்ற ஆவண காப்பகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

◆ இந்தியாவில் ஜார்கண்ட் மாநிலத்தில் அதிக கொலைகளும், டெல்லியில் கடத்தல் சம்பவங்களும் அதிகம் நடைபெறுவதாக அறிக்கை தெரிவிக்கிறது.

◆ முன்விரோதம், ஆதாயம், தகராறு போன்ற காரணங்களினால் அதிகமான கொலைகள் நடக்கின்றன.

### ஜெபக்குறிப்புகள்

1. இந்தியாவில் நடைபெறும் படுகொலைகள் தடுத்து நிறுத்தப்படவும், தேசத்தில் சமாதானம் உண்டாகவும் ஜெபியுங்கள்.

2. ஒவ்வொரு நாளும் நடைபெறும் கொலைகளினால் 82 பேர் மரிக்கின்றனர். இரத்தம் சிந்துதல் நம் தேசத்தை விட்டு அடியோடு ஒழிக்கப்பட ஜெபியுங்கள்.

3. ஒருவரையொருவர் மன்னித்து, கசப்புகளை மறந்து சமாதானத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ வேண்டும் என்ற இருதயத்தை தேவன் கொடுக்க ஜெபியுங்கள்.

4. கொலை செய்யும் எண்ணத்தோடு இருக்கும் நபர்கள் அந்த எண்ணத்திலிருந்து விடுதலையாக்கப்பட ஜெபியுங்கள்.

5. கொலை செய்யத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட ஜெபியுங்கள்.



## மணிப்பூர்

◆ இரு இன மக்களுக்கிடையே எழுந்த மோதல் கலவரமாக மாறிய நிலையில் பழங்குடி இனத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் நிர்வாணப்படுத்தப்பட்டு, பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.

◆ பலர் அகதிகளாக பக்கத்து மாநிலங்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

◆ மணிப்பூரில் வன்முறை சற்று தணிந்த நிலையில், செப்டம்பர் மாதம் கங்குய் பகுதியில் உள்ள 2 கிராமங்களுக்கு இடையே மீண்டும் வன்முறை வெடித்து 3 பேர் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

◆ தொடர்ந்து வெடித்து வரும் வன்முறை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி வருகிறது.

### ஜெபக்குறிப்புகள்

1. வன்முறையினால் வீடுகளை இழந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாக்கப்பட ஜெபியுங்கள்.

2. மணிப்பூரில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கலவரங்கள் தடுத்து நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

3. 2 இன மக்களும் சமாதானம் பெற்று அவர்களுக்குள் ஒருமனம் உண்டாக ஜெபியுங்கள்.

4. பெண்கள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு பாதுகாப்பு கிடைக்கவும், பாலியல் வன்முறைகள் ஒழிக்கப்படவும் ஜெபியுங்கள்.

5. இந்திய அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து, மணிப்பூர் மாநிலத்தில் ஒரு சமூக நிலை உண்டாக ஜெபியுங்கள்.

## ஆபாச தளங்கள்

◆ இந்தியாவில் இளம் வயதிலேயே அதிக அளவில் ஆபாசப் படங்களை இளைஞர்கள் பார்க்கிறார்கள் என்றும், குறிப்பாக 13 வயதில் இருந்தே இந்த பழக்கம் துவங்குகிறது என்றும், நாள்தோறும் அந்த தளங்களைப் பார்க்கும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

◆ இளம் பருவத்தினர் ஆபாசப் படங்களை அதிகமாக பார்ப்பதால் டோபமைன் உற்பத்தி அதிகரித்து, மூளை செயலிழப்புக்கு வழிவகுக்கும் என்றும், ஆபாசப் படங்கள் மனச்சிதைவு போன்ற மனநோய்களுக்கு காரணமாக அமைகிறது எனவும் ஆய்வுகள் கூறுகின்றன.

◆ ஆபாசப் படங்களை அதிகம் பார்க்கும் ஒருவர் எதிர் பாலினத்தவரை நண்பராக கொண்டிருப்பது அவர்களுடைய நீண்ட கால உறவுகளை சீர்குலைத்து, உடல் ரீதியான நெருக்கம் சம்மந்தமான பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது.

◆ இன்றைய காலத்தில் வாலிபர்கள், சிறுவர்கள், ஆண், பெண் , திருமணமானவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள் , இரட்சிக்கப்படாதவர்கள், ஊழியர்கள், விசுவாசிகள், பெரும்பதவியில் இருப்பவர்கள் என்று பாகுபாடு இல்லாமல் அனைவரும் இப்பாவத்திற்கு அடிமையாகி இருக்கின்றனர்.

### ஜெபக்குறிப்புகள்

1. இளம் தலைமுறையினரை சீரழிக்கும் ஆபாச வலைதளப் பக்கங்கள் நம் இந்திய தேசத்தில் முற்றிலுமாக தடை செய்யப்பட ஜெபியுங்கள்.

2. சிறு வயதிலேயே ஆபாசப் படங்களை பார்ப்பதினால் இச்சையினால் நிறைந்து பல்வேறு விதமான பாலியல் வன்முறையில் ஈடுபடும் இளம் தலைமுறையினருக்காக மிகுந்த பாரத்தோடு ஜெபியுங்கள்.

3. இளம் வயதில் குழந்தைகள் இந்த தவறான வழியில் செல்லாமலிருக்க, பெற்றோர் பிள்ளைகளிடம் மிகுந்த கரிசனையுடன் அன்பு கூர்ந்து, நல் ஆலோசனைகளை கொடுத்து வழி நடத்திட பாரத்தோடு ஜெபியுங்கள்.

4. ஆபாசப் படங்கள் பார்ப்பதினால் மனச்சிதைவு போன்ற மனநோய்களுக்கு ஆளாகி இருப்பவர்கள் அதிலிருந்து வெளிவர ஜெபியுங்கள்.

5. இதில் அடிமைப்பட்டு இருப்பவர்கள் அது பாவம் என்பதை உணர்ந்து அதிலிருந்து விடுவிக்கப்படவும் மனந்திரும்பவும் ஜெபியுங்கள்.

# வேதாகம புதையல் வேட்டை

புதிர்: ஜான்சி வில்லியம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நீ | ண் | ட | பொ | று | மை | X | X | ம் |
| தே | வ | ப | க் | தி | யு | ள் | ள | ண |
| வி | சு | வா | ச | ம் | அ | ன் | பு | கு |
| தா | ழ் | மை | கி | ரு | து | ன | ம | த |
| கீ | ழ் | ப் | ப | டி | கி | ற | தே | ந் |
| த | ன் | சி | லு | வை | யை | நீ | தி | சா |

### இடமிருந்து வலம்

1. எது ஒருக்காலும் ஒழியாது.
2. எது உம்மை ஆதரிக்கும்.
3. ------- மனிதர்கள் ஸ்தேவானை எடுத்து அடக்கம் பண்ணினவர்கள்.
4. செத்த கிரியைகளுக்கு நீங்கலாகும் மனந்திரும்புதல் தேவன் பேரில் வைக்கும் -------
5. மேன்மைக்கு முன்னானது -------
6. எதனால் பிரபுவையும் சம்மதிக்க பண்ணலாம்?
7. ஒருவன் என் பின்னே வர விரும்பினால் தன்னைத் தான் வெறுத்து ------- எடுத்து கொண்டு பின்பற்றக்கடவன்.
8. காற்றும் கடலும் இவருக்கு -------




### வலமிருந்து இடம்

9. இயேசு வியாதியஸ்தர்களைக் கண்டு எப்படி சொஸ்தமாக்கினார்.

### கீழிருந்து மேல்

10. கர்த்தர் -------- நியாயத்திலே நடத்துகிறார்

### கடந்த மாத விடைகள்

1. போர்வீரன் (நியா. 6:12)
2. சுவிசேஷகன் (அப். 8:5)
3. ஆசாரியன் (அப். 22:3)
4. கின்னரக்காரன் (ஆதி.4:21)
5. ஆயக்காரன் (லூக்கா 5:27)
6. இரத்தாம்பர வியாபாரி (அப். 16:4)
7. தோல் பதனிடுகிறவன் (அப். 9:43)
8. கூடாரத்தொழிலாளி (அப். 18:3)
9. தீர்க்கதரிசி (2 சாமு. 7:2)
10. விவசாயி (ரூத் 3:2)
11. பானபாத்திரக்காரன் (நெகே.1:11)
12. நியாயாதிபதி (நியா. 3:9,10)
13. தட்டான் (அப். 19:24)
14. பித்தளை இரும்பு தொழிலாளி (ஆதி. 4:22)
15. தோட்டக்காரன் (ஆதி. 2:15)
16. படைத்தலைவன் (2 இராஜா. 5:1)

கடந்த மாத வெற்றியாளர்:

சகோதரி ஆஷிகா (விருதுநகர்)

அவர்களை வாழ்த்துகிறோம்.

**பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.12.2023**

Jesus Redeems Youth Ministries,
Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535.
eMail: youth@jesusredeems.org

# கிறிஸ்மஸ் கேக்

300 கிராம் மைதா, 250 கிராம் சக்கரை, 4 முட்டை,
1 கிராம் பேகிங் பவுடர், 150 கிராம் பட்டர், டூட்டி ப்றுடி தேவைகேற்ப,
திராட்சை தேவைகேற்ப, வெண்ணிலா கலர் தேவைகேற்ப,
50 கிராம் முந்திரி, 50 கிராம் செர்ரி, 50 கிராம் வால்நட்



ஒரு பாத்திரத்தில் மைதா மாவை தெளித்து கொள்ளவும். இதனுடன் திராட்சை, முந்திரி சிறிதாக வெட்டி சேர்த்துகொள்ளவும். வெண்ணிலா கலருடன் உருகிய பட்டர் மற்றும் சக்கரை சேர்த்து கொள்ளவும். அத்துடன் முட்டை சேர்த்து நன்றாக கலக்கவும். இந்த கலவை எடுத்து மைக்ரோ அவன் பாத்திரத்தில் 120 டிகிரி சூட்டில் அரை மணி நேரம் வைக்கவும். சூடான சுவையான கிறிஸ்மஸ் கேக் ரெடி.


சங்கரன்கோவிலில்... **Achievers** 2024 காங்கேயத்தில்...

(தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை )

நாள்: 2024 **ஜனவரி 19**
(ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4:30 மணி முதல் 7:30 மணி வரை

இடம்: St. Paul's மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி,
சங்கரன்கோவில் - கழுகுமலை ரோடு, சேவல் குளம்

தொடர்புக்கு: 94882 94396, 9677858766

நாள்: 2024 **ஜனவரி 21**
(ஞாயிற்றுக் கிழமை)
நேரம்: மாலை 4 மணி முதல் 7 மணி வரை

இடம்: Y N C (கொரியா) சர்ச் ,
காந்திபுரம் தாராபுரம் ரோடு
(ஹை ஸ்கூல் அருகில்) காங்கேயம்

தொடர்புக்கு: 82482 83373
94428 85315



ஆலோசனையும் ஜெபமும் :
**சகோ. சதீஷ் குமார்**



சரித்திரம்: ஜெயசீலன்

# தேவனுடைய இருதயத்துக்கு ஏற்றவன்!

## மன்னன் தாவீதின் முடிவு

என் அன்புக் குழந்தைகளே! ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் பெயரில் உங்களுக்கு என் வாழ்த்துக்கள். இறுதியாக இம்மாதம் மன்னன் தாவீதின் முடிவு எப்படியிருந்தது என்பதை தியானித்து முடிக்கலாம். (2 சாமு.5:10, 1 நாளா.11:9) இந்த இரண்டு வேதபகுதிகளும், “தாவீது நாளுக்கு நாள் விருத்தியடைந்தான்” என்பதாகவும், இன்னொரு மொழியாக்கத்தில், “நாளுக்கு நாள் சீரும் சிறப்பும் பெற்றான்” என்பதாகவும் கூறுகிறது.

### ஆற்றல்

ஆடுகளை மேய்த்துக்கொண்டு, வனாந்திரத்தில் அலைந்த இடையன் தாவீது, சமஸ்த இஸ்ரவேலுக்கும் மன்னனாக உயர்த்தப்பட்டு, தொடர்ந்து வளர்ச்சியடையக் காரணம் அல்லது ரகசியம் என்னவென்று பார்த்தால், இந்த வசனங்களின் (2சாமு.5:10, 1நாளா.11:9) பின்பகுதியில், சேனைகளின் தேவனாகிய கர்த்தர் அவனோடேகூட இருந்தார் என்பதாக எழுதப்பட்டுள்ளது. தாவீது நாளுக்கு நாள் சீரும் சிறப்பும் பெற்று, விருத்திடையக் காரணம்: வானத்தையும், பூமியையும் உண்டாக்கிய தேவனாகிய கர்த்தர் மன்னன் தாவீதோடிருந்தார் என்பதுதான்.

ஆகவேதான், ‘‘கர்த்தரை எப்பொழுதும் எனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அவர் என் வலதுபாரிசத்தில் இருக்கிறபடியால் நான் அசைக்கப்படுவதில்லை’’ (சங்.16:8) என்பதாகப் பாடுகிறார். கர்த்தரைத் தனக்கு முன்பாக, தன்னோடு வைத்துக்கொள்ளுகிற ஒரு அனுபவம் தாவீதுக்கு இருந்தது.

யுத்த நேரத்தில் மட்டுமல்ல, கரடியும், சிங்கமும் தனக்கு எதிர்படும்போது மட்டுமல்ல, எதிரிகளால், தன் சொந்தக்குமாரன் அப்சலோமால் துரத்தப்படும் போது மட்டுமல்ல...எப்போதும் கர்த்தரைத் தனக்கு முன்பாக வைத்திருந்தார். தேவைப்படும்போது மட்டும் மன்னன் தாவீது கர்த்தரைத் தேடவில்லை. எப்பொழுதும் கர்த்தரைத் தேடுகிற ஒரு அனுபவம் அவருக்கு இருந்தது.

தாவீது எப்பொழுது மகா பலசாலியான கோலியாத்துடன் தன் முதல் யுத்தத்தைத் தொடங்கினாரோ அன்று முதல் தனக்கெதிராய் வந்த, கானானியர், ஏத்தியர், எபூசியர், சீரியர், பெலிஸ்தர், மோவாபியர் என இறுதி வரை நடந்த அத்தனை யுத்தங்களிலும் கர்த்தரைத் தனக்கு முன்பாக வைத்திருந்த மன்னன் தாவீது எதிரிகளை சிதறடித்து, மாபெரும் வெற்றிவாகை சூடினார்.

### ஆசீர்வாதம்

தாவீதின் தகப்பனாகிய ஈசாய் பெத்லகேம் என்ற சிறிய ஊரில் வசித்த ஒரு விவசாயி. ஆடு வளர்ப்பவர். கொஞ்சம் ஆடுகளை (1சாமு.17:28) தங்கள் சொத்தாக

வைத்து, வனாந்திரத்தில் அவைகளை மேய்த்துக் கொண்டிருந்த தாவீது கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டார்.

தேவதிட்டப்படி, சாமுவேல் தீர்க்கதரிசியால் இஸ்ரவேலுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். கோலியாத்தை வீழ்த்தியபின், மன்னன் சவுலின் கண்களில் தாவீதுக்குத் தயை கிடைத்து, சவுலின் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டார். கர்த்தருடைய யுத்தங்களை நடத்தும் பொறுப்பைப் பெற்றார்.

சுரமண்டலத்தை இசைத்து, மன்னன் சவுலின் மீதிருந்த பொல்லாத ஆவியைத் துரத்தினார். மன்னன் சவுலின் மருமகனானார். யூதாவுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டார். மன்னன் சவுலின் மரணத்திற்குப்பின் சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக தனது 37ஆம் வயதில் மன்னரானார்.





கர்த்தர் தாவீதையும், அவர் வீட்டையும் ஆசீர்வதித்தார். ஒரு பக்கம் இடைவிடாத யுத்தங்கள் நடைபெற்றுக் கொண்டேயிருந்தாலும், பஞ்சங்கள் நேர்ந்தபோதும், கர்த்தர் மன்னன் தாவீதோடிருந்து தேசத்தைப் பாதுகாத்து ஆசீர்வதித்தார். சத்துருக்களுக்கு நீங்கலாக்கி இளைப்பாறப் பண்ணினார். தாவீது, ஆண்டவருக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்டுவதற்காக பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரங்கள், கற்கள் என எல்லாவற்றையும் திரளாய் சேர்த்து வைத்தார்.

கர்த்தர் எருசலேமில் தாவீதுக்கென்று ஒரு அழகான வீட்டையும், அழகான ஒரு அரண்மனையையும் ஏற்படுத்தினார். அது தாவீதின் நகரம் என்று அழைக்கப்பட்டது. அநேக மனைவிகளையும், சுமார் 19 குழந்தைகளையும் தந்து, ‘‘உன் வீடும் இராஜ்ஜியமும் என்றென்றைக்கும் எனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்’’ என ராஜ்யத்தை அவர் சந்ததிக்கு நிலைப்படுத்தித் தந்தார்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவராகிய இயேசுவும் கூட ஆபிரகாமின் குமாரன் என்றோ, யோசேப்பின் குமாரன் என்றோ அழைக்கப்படாமல் தாவீதின் குமாரன் என்றே அழைக்கப்பட்டார் (புதிய ஏற்பாட்டில் 17 வசனங்கள் ஆண்டவராகிய இயேசுவைத் தாவீதின் குமாரன் என தெரிவிக்கின்றன). மன்னன் தாவீதுக்கு இதற்குமேல் என்ன பெரிய ஆசீர்வாதம் வேண்டும்.

அன்புக்குரிய பிள்ளைகளே. தாவீதை ஆசீர்வதித்து விருத்தியடையச் செய்த கர்த்தர் உங்களையும் ஆசீர்வதித்து உயர்த்த வல்லவராயிருக்கிறார். ஆனால் கர்த்தர் உங்களோடிருக்க வேண்டும். கர்த்தர் உங்களோடிருந்தால் மட்டுமே, நீங்கள் ஆற்றல் உள்ளவர்களாகவும், ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும் நிலைத்திருக்க முடியும். ஆண்டவர் இயேசுவின் அன்பை விட்டு உங்களைப் பிரிக்கும் காரியங்கள் என்ன என்பதை சிந்தித்து, அவற்றை அகற்றி, ஆண்டவரின் பாதத்தில் அர்ப்பணித்து, தேவைக்குக் கர்த்தரைத்தேடாமல், எப்போதும் அவரைத் தேடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். யாவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள்!

# ஓடுகளம்

## எழும்புதல் ஓட்டம்

நிகழ்வு: காலேப்



**'ஓடுகளம்' என்கிற இந்த தொடரின் மூலம் கடந்த சில மாதங்களாக மாரத்தான் ஓட்டப் பந்தய வீரர்களின் சாதனையைக் குறித்தும், அவர்களின் கடின உழைப்பு, விடாமுயற்சி ஆகியவற்றையும், வேதாகமத்தில் தேவனுக்காகத் தீவிரமாக ஓடினவர்களையும் குறித்து தியானித்து, அநேகக் காரியங்களைக் கற்றுக் கொண்டு வருகிறோம். இந்த மாதமும் இந்த தொடரின் மூலம் வரப்போகிற எழுப்புதலில் எப்படி தேவனுக்காகத் தீவிரமாக ஓடுவது என்பதைக் குறித்து கர்த்தர் உங்களோடு பேச விரும்புகிறார்.**



ஜப்பான் நாட்டைச் சேர்ந்த யுகி கவாச்சி என்பவர் அந்த நாட்டின் பள்ளி ஒன்றில் நிர்வாகியாகப் பணிபுரிந்தார். அதே நேரம் இவர் பகுதி நேரமாக மாரத்தான் ஓட்டப்பந்தயத்தில் பங்கு பெற்று வந்தார். இவர் பாஸ்டன் நகரில் நடைபெற்ற மாரத்தானில் பங்குபெற்றார். ஓட்டம் துவங்கிய அன்று பலத்த காற்றுடன் மழையும், உறைய வைக்கும் அளவு குளிரான சூழ்நிலையும் இருந்தது. அதுமட்டுமல்லாமல் மாரத்தான் ஓட்டத்திற்கென்றே பிறந்த எத்தியோப்பியா, கென்யா வீரர்கள் ஒரு பக்கம் தீவிர பயிற்சி செய்து போட்டிக்கு தயாராகிக் கொண்டிருந்தனர். இப்படி கவாச்சி வெற்றி பெறுவதற்கான சாத்திய கூறுகள் குறைவாகவே இருந்தன. ஆனால் யுகி கவாச்சி, கடுமையான கால சூழ்நிலையையும், பலம் வாய்ந்த போட்டியாளர்களையும் மேற்கொண்டு, பாஸ்டன் மாரத்தானில் முதலிடம் பிடித்து வெற்றி பெற்றார். பொதுவாக மாரத்தான் என்றாலே அது பொறுமையாக ஓடி வெற்றி பெறுவார்கள். ஆனால் யுகி ஆரம்பத்திலிருந்தே வேகமாக ஓடினார்.

அவருக்கும் அவருக்கு பின்பாக ஓடினவர்களுக்கும் சுமார் 300 மீட்டர் இடைவெளி இருந்தது. இதனை ஆரம்பத்தில் விமர்சித்து, நகைத்த வர்ணனையாளர் யுகியின் வேகத்தையும், ஓட்டத்தையும் பார்த்து வியந்து அவரை பாராட்ட ஆரம்பித்தார். யுகி கவாச்சி, சூழ்நிலையையோ, பலம் வாய்ந்த போட்டியாளர்களையோ பார்த்து சோர்ந்து விடாமல் வெற்றி ஒன்றையே இலக்காக வைத்து ஓடியதால் பெரிய வெற்றியடைந்தார்.

**இவரைக் குறித்து வாசிக்கும் போது, வேதத்தில் எலியாவின் அபிஷேகத்தை வாஞ்சித்து அவருக்குப் பின்பாக சென்று அந்த அபிஷேகத்தை இரட்டிப்பு மடங்காக பெற்ற எலிசா நினைவிற்கு வருகிறார். அவர் அந்த அபிஷேகத்தைப் பெற என்னென்ன சவால்களை சந்தித்தார்? அதை எப்படி மேற்கொண்டார்? என்று பார்க்கலாம்.**

### எலிசாவின் விலைக்கிரயம்

1 இராஜாக்கள் 19:19-21 வரையுள்ள வசனங்களில் எலிசா அறிமுகமாகிறார், அவர் தேவனுடைய தீர்க்கதரிசன ஊழியத்தை நிறைவேற்றுகிற அழைப்பைப் பெற்றார். அந்த காலத்தில் எலியா தீர்க்கதரிசியை கொலை செய்ய ஆகாபும், யெசபேலும் தேடிக் கொண்டிருந்தனர். அச்சமயம் எலிசா தன் வீட்டையும்,



குடும்பத்தையும் விட்டுவிட்டு வர வேண்டும் என்று எலியா கட்டளையிட்டிருந்தார். மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேதாகம பகுதியில் எலிசா ஒரு செல்வந்தராக கூட இருந்திருக்கலாம் என்று தெரிகிறது. இப்படி ஒரு வசதியான, ஆடம்பரமான வாழ்க்கையை விட்டுவிட்டு உயிருக்கே ஆபத்தான தீர்க்கதரிசன ஊழியத்தை செய்யவும், எலியாவை பின்பற்றவும் அவர் தன்னை ஒப்புக்கொடுத்து, பரம தரிசனத்திற்கு கீழ்படிந்தார். கர்த்தரைப் பின்பற்றுவதற்காக தன் வீட்டை, குடும்பத்தை, தனக்கு உண்டான அனைத்தையும் இழக்க ஆயத்தமாக இருந்தார்.

## அரிதானதைக் கேட்டார்

எலியாவின் காலத்தில் அநேக தீர்க்கதரிசிகள் இருந்தார்கள், ஆனால் எலிசா எலியாவிடம் அவரின் அபிஷேகத்தை இரட்டிப்பு மடங்காகக் கேட்டார். அப்போது இருந்த தீர்க்கதரிசிகள் யாருக்கும் இப்படி ஒரு ஆசை வரவில்லை. நாம் ஒரு காரியத்தை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ள நமக்கு அதின் மேல் தாகமும், வாஞ்சையும் அவசியம். எலிசாவின் தாகமும், வாஞ்சையும் எலியாவின் மேலிருந்த அபிஷேகத்தின் மேல் தான் இருந்தது. அதற்காக எந்த அளவிற்கும் போகத் துணிந்தார். அதினால் தான் 2 இராஜாக்கள் 2ம் அதிகாரத்தில் எலியாவின் மேலிருந்த ஆவியின் அபிஷேகம் இரட்டிப்பு மடங்காக எலிசாவின் மேல் இறங்கினது. அதன் விளைவாக தேவனுடைய ஊழியத்தை பலத்த அற்புத அடையாளங்களோடும் செய்தார்.

**அன்பான வாலிபர்களே! இது கடைசிக் காலம், இயேசுவின் இரண்டாம் வருகைக்கான அடையாளங்கள் யாவும் தீவிரமாய் நடந்துக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்தையும் நாம் பார்த்தும் இன்னும் உலக சிற்றின்பங்களையும், பொழுதுபோக்குகளையும் தேடிக் கொண்டிருப்போமானால் அந்த நாள் வரும்போது ஆயத்தமில்லாமல் காணப்படுவோம். ஆகையால் நாட்கள் பொல்லாதவைகளாக இருக்கிறபடியால் காலத்தை பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள். எழும்பிப் பிரகாசியுங்கள்! கர்த்தர் உங்களைப் பயன்படுத்த ஆயத்தமாக இருக்கிறார்.**

**“...பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?” (2 இராஜா. 5:26).**






வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!

## EVERY 1st SUNDAY (3rd Dec.)

**MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)**
World Revival Prayer Centre
2nd Floor, Above Balakrishna Farsan Mart,
Opp. Apna Restaurant,
Near Kamarajar School,
90 Feet Road,
9004882470

**VELLORE (3PM)**
World Revival Prayer Centre,
Ajantha Mahal,
# 3, 6th West Cross Road,
Gandhi Nagar
9442885315 | 9786379556

**TIRUPUR (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#62, 2nd Floor,
Benny Kumaran Main Road.
9442082200

**TUTICORIN (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
Jehovah Jireh
Towers, 51/8D/3, 1st Floor
Tiruchendur Road,
Muniasamypuram Land mark :
South Police Station to Kamaraj College Rd. 9442885315

**TIRUPATI (3PM)**
Old Community Hall,
West Church
9985033401 | 9442885315

## EVERY 2nd SATURDAY (9th Dec.)

**BANGALORE (3PM-5PM)**
Telugu Church, #21, Nethaji Road,
Railway Line, Pulikeshi Nagar, Frazer Town.Opp: BWSSB Office.
9962085523 | 9591077110

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,
Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41, K.Salai pudur
Byepass Road,Madurai - 18
9750955548 | 9344759316

## EVERY 2nd SUNDAY (10th Dec.)

**SANKARANKOIL (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

**AMBUR (3PM-6PM)**
Concordia Hr.Sec. School,
Opp Rly.Station
9597927799 | 9442885315

**MUMBAI - BHANDUP (4PM – 6:30PM)**
Bright High School, Village Road,
Bhandup (W), Mumbai – 400078
9004882470

**POLLACHI (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Grace Auto 1st floor,
163 , raja mill road pollachi,
9486037586 | 9487856205

**THANJAVUR (3PM)**
World Revival Prayer Centre,
Near Balaji Nagar Bus Stop,
18B, TPS Nagar, MC Road
9444381971 | 9488475315

**KOVILPATTI (3PM -5:30PM)**
St. Paul's Matriculation School
9677858766 | 9787322334

**ALANGULAM (2:30PM)**
P.M.V. Packiyavathy Building,
R.A. Nursing Institute,
SCV Computers (top Floor)
Main Road,
Near Union Office Opposite
9965377427 | 9750955548

**THENI (2:30PM – 5PM)**
World Revival Prayer Centre,
#203, Madurai Road,
Opp. Anantham Silk
Dr. Kamaraj Hospital,
1st Floor
9750955548 | 9976766422

**SURANDAI (2:30PM)**
Jawarhalal Middle School
9443962141 | 9750955548

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre,
HOREB Complex, 1st Floor,
P K N Road, (Rathna vilas Stop)
9677858766 | 9442906567

**SATHANKULAM (3PM -5:30PM)**
Hendry Matric Higher Secondary School Mela Sathankulam.
9442885315

**CHENGALPET (3PM – 5:30PM)**
Blessing School,
Tirukazhukundram Road
9488475315

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre,
HH Complex, Namnadu Textiles
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

## EVERY 3rd SUNDAY (17th Dec.)

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre,
Shah Complex, #43/R4,
Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9488212915

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre,
#90, 1st Floor, Arts College Road,
Near Charan Tower,
0422 – 2309040 | 8903405315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre,
22A, 1st Floor Thennur High
Road, Near KMC Bus Stop,
Thennur.
9488475315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram,
Kadaiyam (via) Tenkasi Dist.
8300131000 | 9750955548

**CHENNAI (3 PM)**
VGP Victory House, Mount Road
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1A/25B, Bypass Road (opp Arasu
Autos)
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre,
Railway Station RoadZion Nagar,
Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre,
#216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kottupalayam Lawspet, opp. Latha
Steel, E C R Road. 8344433800 |
9442885315

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre,VK Road.
9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
Kamlambal Street,Readspet,
Kangareddy palli,
9487734603

## EVERY 4th SATURDAY (23rd Dec.)

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre,
M K Complex, 71,Venkatesapuram,
Near Bank of Baroda,
Trichy Main Road.
9788788512

## EVERY 4th SUNDAY (24th Dec.)

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre
H S R Tower, 2nd Floor,
Near CSI Gowdi Church
9488475315

**KRISHNAGIRI (3 PM – 5PM)**
World Revival Prayer Centre,
Near Arun Hospital
Royakottai Road.
9962085523 | 9524999711

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools,
Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor
305/E, Mith Chauky, Marve Road,
Malad (W)
9664050567 | 9619996976

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி
Sathiyam
YouTube
Comforter DIGITAL CHANNEL
காலை 7 மணிக்கு
YouTube மற்றும்
Comforter TVயிலும் பார்க்கலாம்.
வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 31st DECEMBER
TIME: 3:00 PM - 5:00 PM
IGNITERS, MONTHLY YOUTH FELLOWSHIP IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON LAST SUNDAY OF EVERY MONTH



வேதாகம தேசங்கள்: கெத்சி கிளார்வின்

# பெத்லகேம்

*Bethlehem*

**அன்பு வாலிபர்களே! வேதாகம தேசங்கள் என்ற தலைப்பில் கடந்த 1 வருடமாய் வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள சில தேசங்களையும் அதின் சிறப்புமிக்க பட்டணங்களையும் குறித்து பல சுவாரசியமான தகவல்களை நீங்கள் வாசித்து அறிந்திருப்பீர்கள்! தொடர்ந்து இம்மாதம் நாம் பார்க்கவிருக்கும் பட்டணத்தின் பெயர் "பெத்லகேம்".**

## அறிமுகம்

- ''அப்பத்தின் வீடு'' என்று அழைக்கப்படும் பெத்லகேம் வேதாகமத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முற்காலத்தில் இது 'எப்பிராத்தா' என்றும் 'யூதாவின் பெத்லகேம்' அல்லது 'பெத்லகேம் – யூதா' என்றும் அழைக்கப்பட்டது.
- வேதாகமத்தில், ரூத்தின் மாமனாரான எலிமலேக்கு பெத்லகேமின் குடிமகன் ஆவார்.
- அது போல, இஸ்ரவேலின் அரசரான தாவீதும் பெத்லகேம் ஊரைச் சார்ந்தவர்.
- அதைவிட முக்கியமாக, உலகின் இரட்சகராகிய கிறிஸ்துவை நமக்கு கொடுத்த நகரம் இந்த ''பெத்லகேம்'' ஆகும்.

**"அவள் தன் முதற்பேரான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாத திருந்தபடியினால், பிள்ளையை துணிகளில் சுற்றி, முன்னணையில் கிடத்தினாள்." (லூக்கா 2:7)**

## சிறப்பம்சங்கள்

- தற்போது பெத்லகேம் பாலஸ்தீனாவில் மேற்குக் கரை என்னும் பகுதியில் உள்ளது. **(A CITY IN PALESTINE).**
- இது உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் புனித ஸ்தலமும், சுற்றுலா மையமுமாகும்.
- இயேசு கிறிஸ்து பிறந்த இடத்தில் ஓர் தேவாலயம் அமைந்துள்ளது. அதுவே **"THE CHURCH OF THE NATIVITY".**
- இந்த ஆலயத்தைக் கட்டியவர் 'கான்ஸ்டண்டைன்' **(CONSTANTINE)** ஆவார்.
- கி.பி. 529-ல் இந்த ஆலயத்திற்கு சேதம் ஏற்பட்டாலும், இன்றளவும் இஸ்ரவேல் தேசத்தில் காட்சிப்பொருளாக நின்று கொண்டிருக்கிறது.



**அன்பு வாலிபரே! உன் இரட்சகரின் பிறப்பு ஏதோ கட்டுக்கதை அல்ல, அவரின் பிறப்பே வரலாற்றை கிறிஸ்துவுக்கு முன் (கி.மு), கிறிஸ்துவுக்கு பின் (கி.பி) என்று இரண்டாகப் பிரித்துள்ளது.**


சிறப்புக் கட்டுரை: ரவி

# பட்சபாதம் காட்டாதீர்கள்!



என் அன்பிற்குரிய தம்பி தங்கைகளுக்கு என் அன்பின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு இம்மாதக் கட்டுரைக்குள்ளாகக் கடந்து போக விரும்புகிறேன். கட்டுரைக்கானத் தலைப்பு, ''பட்சபாதம் இல்லாதவர்'' **(God is Impartial).** இந்த பட்சபாதம் காட்டும் பண்புக்கான ஒருசில உதாரணங்களை நம்முடைய நடைமுறை வாழ்க்கையிலிருந்து பார்த்து விட்டு பின்பு, வேதம் கூறும் பட்சபாதம் இல்லாத நம் தேவனைக் குறித்து ஆழமாய் ஆராய்வோம். முதல் உதாரணமாக, இந்தக் கட்டுரையை வாசிக்கும் வாலிபராகிய நீங்கள் படிக்கும் கல்லூரிகளில், பொதுவாக ஆசிரியர்களுக்கு பிடித்த அல்லது செல்லமாக பாவிக்கும் ஒருசில மாணவ, மாணவியர் இருப்பார்கள். ஆசிரியர்களுக்கு அம்மாணவர்களை இஷ்டப்படுவதற்குக் காரணம் என்னவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அவர் நன்றாக படிப்பதனாலேயோ; நல்ல ஒழுக்கத்தோடு பரிமாறுகிறதாலேயோ, அல்லது சில நேரங்களில் அவர்களுக்கு நெருக்கமானவர்களாகவோ அல்லது, சொந்தமானவர்களாகவோ இருப்பதாலோ இருக்கலாம். அந்த ஆசிரியர் தனக்கு பிடித்த மாணவன் அல்லது மாணவி தவறு அல்லது பொல்லாங்கு செய்யும் போது கண்டு கொள்ளாமலோ, அல்லது அத்தவறுக்கான தண்டனையை தடுத்தாலோ அவர் அம்மாணவருக்கு பட்சபாதம் காண்பிக்கிறார் என்று சொல்லலாம்.


ஆம் நண்பர்களே! இத்தகைய நடக்கைகளை நாம் நம்முடைய வேலையிடங்களிலும், பொதுவான அரசாங்க அலுவலகங்களிலும் மற்றும் பிற இடங்களிலும் வெகுவாக காணலாம். இந்த உலகம் இப்படியாகத்தான் இயங்குகிறது. ஆனால், நம்முடைய தேவன் பட்சபாதம் இல்லாதவர். **"முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் பொல்லாங்குசெய்கிற எந்த மனுஷ ஆத்துமாவுக்கும் உபத்திரவமும் வியாகுலமும் உண்டாகும். தேவனிடத்தில் பட்சபாதமில்லை" (ரோமர் 2:9,11)** என்று வேதம் சொல்கிறது. தேவன் பட்சபாதம் இல்லாதவரானதால், தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் பட்சபாதம் இல்லாதவர்களாகவும், பட்சபாதம் காண்பிக்கும்படி நேரடியாகவோ, மறைமுகமாகவோ தூண்டாதவர்களாகவுமே இருக்க வேண்டும்.



தேவன் ஏன் பட்சபாதம் இல்லாதவராக இருக்கிறார்? காரணம், அவர் நீதியுள்ள நியாயாதிபதி. நீதியும், நியாயமும் அவருடைய சுபாவத்தின் பாகமாக விளங்குவன. ஒரு நீதிபதியாக இருக்கும் நபர் பட்சபாதம் காண்பிக்கக் கூடாது. அப்படி காண்பிக்கும் பட்சத்தில், தான் காக்க வேண்டிய நீதியை தாமே உடைக்கிறபடியால், அவர் நீதிபதியாக தரிக்க தகுதியற்றவராக போய் விடுகிறார். இப்படியான பட்சபாதம் இல்லாத தேவனை நாம் பின்பற்றுகிறபடியால், அவருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நாம் நிற்க போகிறபடியால், நாம் தேவ பயத்தோடு வாழ்வது அவசியம்.

ஆம் நண்பர்களே, நாம் வாழும் இவ்வுலக வாழ்க்கை மிகவும் குறுகியது. ஆனாலும், இயேசுவை சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக் கொண்டு நாம் வாழும் இவ்வாழ்க்கையே நித்தியத்தில் நமக்கு உண்டாகும் பலனைத் தீர்மானிக்கிறது. நம்முடைய செயல்களை மாத்திரம் அல்ல, நம் மனதின் எண்ணங்களையும் அவர் அறிந்திருக்கிறார். **"ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும்" (I கொரி. 4:5)** என்று வேதம் சொல்கிறது. ஆகவே, வெளியே ஒரு முகம், உள்ளே ஒரு முகம் என்னும் இரண்டக வாழ்க்கை தேவனுக்கு முன்பாக எடுபடாது.

**என் சகோதர சகோதரிகளே! தேவனுடைய இரக்கத்தையும் பொறுமையையும் நாம் அசட்டை செய்யலாகாது. உலகத்தில் அநியாயம் செய்பவர்கள், உலக சட்டத் திட்டங்களுக்குத் தப்பித்தாலும், தேவனுடைய நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்க முடியாது. அதுபோல, அவருடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும் நாமும், தைரியத்தோடு அவர் முகத்தை நோக்கிப் பார்க்க, நாம் வாழும் இவ்வாழ்க்கையில், அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் நம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட வேண்டும்.**



# COFFEE *with* பத்திரிக்கையாளர்

பேசலாம் வாங்க: வயலா

## நற்செய்தி அறிவித்த நான்கு குஷ்டரோகிகள்!

**சீரியாவின் ராஜா பெனாதாத் தன் இராணுவத்தையெல்லாம் கூட்டிக் கொண்டு வந்து சமாரியாவை முற்றுகை போட்டிருந்த சமயம் அது. அதினாலே சமாரியாவிலே கொடிய பஞ்சமுண்டாயிருந்தது. ஜனங்கள் மிகுந்த பசி, பட்டினியால் தவித்து வந்தார்கள். "பசி கொடுமையினால் பெற்ற பிள்ளையை ஆக்கித் தின்றோம்" என்று ஈவு இரக்கமின்றி தாய்மார்கள் கூறும் அளவிற்கு பஞ்சத்தின் அகோரம் தலைவிரித்தாடியது. இந்த சூழ்நிலையில், பரிசுத்த வேதாகமத்தில் பெயர் குறிப்பிடப்படாத நான்கு குஷ்டரோகிகள் ஒலிமுகவாசலில் இருந்தனர். இவர்களின் துணிச்சலான செய்கையினால் முழு சமாரியாவும் பஞ்சத்தின் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்ட இந்த சம்பவம் 2 இராஜாக்கள் 7ம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ளது. இவர்களை நம்முடைய பத்திரிக்கையாளர் சந்தித்து அவர்களுடன் நடத்திய உரையாடலின் கற்பனைத் தொகுப்பை கீழ்க் காண்போம்.**

**பத்தி:** அண்ணாச்சிமார்களே வணக்கம்.

**குஷ்டரோகிகள்:** வணக்கம்.

**பத்தி:** உங்களைப் பற்றிய விரிவான தகவல்களை சற்று கூறுங்களேன்.

**குஷ்டரோகி 1:** நாங்கள் இஸ்ரவேல் தேசத்தில் உள்ள சமாரியா நகரத்தைச் சார்ந்தவர்கள். நாங்கள் குஷ்டரோகத்தினால் மிகுந்த அவதியுற்று ஜனங்கள் மத்தியில் வாழக் கூடாமல் நகரத்திற்கு புறம்பே வாழ்ந்து வந்தோம்.

**குஷ்டரோகி 2:** நாங்கள் தீட்டுள்ளவர்கள். நாங்கள் குடும்பத்தோடு, பிள்ளைகளோடு வாழ்ந்தால் மற்றவர்களுக்கும் குஷ்டரோகம் வந்துவிடும் என்பதால் வியாதியைக் கண்டவுடன் எங்களை பாளயத்திற்குப் புறம்பே விட்டு விடுவார்கள்.

**குஷ்டரோகி 3:** எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்கள் யாராவது எங்களுக்கு உணவு கொண்டு வந்து தொலை தூரத்தில் வைத்து விட்டு சென்று விடுவார்கள். அவர்கள் சென்ற பின் நாங்கள் போய் உணவை எடுத்து சாப்பிடுவோம்.

**குஷ்டரோகி 4:** திருமணமோ, பண்டிகையோ எதுவாயிருந்தாலும் நாங்கள் பங்கு பெறக்கூடாது. எங்களால் சமுதாயத்திற்கோ, குடும்பத்திற்கோ பலன் எதுவுமில்லை. ஏன், எங்களுக்கே நாங்கள் பிரயோஜனமில்லாதவர்கள்.

**பத்தி:** பஞ்சத்தின் போது நீங்களும் உங்கள் ஜனங்களும் எவ்வாறு இருந்தீர்கள்?


**குஷ்டரோகி 2:** ஐயோ! பஞ்சம் மிகவும் கொடூரமானது. பொதுவாக ஜனங்கள் சாப்பிட்டு முடித்து எங்களுக்கு ஒரு பங்கை கொண்டு வருவார்கள். ஆனால், அவர்களுக்கே இல்லாத போது, எங்களுக்கு உணவு தர ஒருவருமில்லை. அவரவருக்கு கிடைத்த உணவை அவரவர் இரகசியமாய் வைத்து சாப்பிட்டார்கள்.

**குஷ்டரோகி 1:** செருக்கும் சுக செல்வமுள்ள மனிதர்கள் கூட சகலத்தையும் இழந்து, தங்கள் இல்லாமையினால் தாங்கள்

தின்னும் தங்கள் பிள்ளைகளின் மாம்சத்திலே, தன் சகோதரனுக்காகிலும், தன் மனைவிக்காகிலும் தனக்கு மீந்திருக்கிற தன் மக்களில் ஒருவனுக்காகிலும் கொஞ்சவேனும் கொடாதபடி சுயநலவாதிகளாய் மாறி விட்டார்கள்.

**பக்தி:** இந்தக் கடினமான சூழ்நிலையில் மனச்சோர்வு, உடல் சோர்வு, சாப்பிட்டு பல நாட்கள் ஆன சரீர பெலவீனத்தோடு சீரியருடைய இராணுவத்திற்குள் போகும்படி எப்படி சாதூரியமாக முடிவு எடுத்தீர்கள்?

**குஷ்டரோகி 1:** பசியின் கொடுமையினால் உணவைத் தேடி எங்கு செல்வது என்று சிந்தித்தோம். பட்டணத்திற்குள்ளே உணவில்லாததினால் அங்கு செல்வதில் பயனில்லை. எங்கும் செல்லாமல் எங்கள் இருப்பிடத்திலே இருந்தாலும் பசியினால் மரிக்கப் போவது நிச்சயம், உணவு இருக்குமிடம் சீரியர் இராணுவத்தில் தான். எனவே, அவர்கள் நம்மை உயிரோடே வைத்தால் பிழைப்போம், கொன்று போட்டால் சாகிறோம் என்ற துணிச்சலோடு அன்று இரவே சீரியருடைய பாளயத்தின் முன்னணிக்குச் சென்றோம்.



**பக்தி:** சீரியருடைய இராணுவத்திற்குள் சென்ற போது என்ன நடந்தது?

**குஷ்டரோகி 3:** நாங்கள் பயத்துடனே மெது மெதுவாய் அடி எடுத்து வைத்து ஒரு கூடாரத்திற்குள் நுழைந்தோம் ஆச்சரியவிதமாய் உள்ளே ஒருவரும் இல்லை. மீண்டும் ஆளுக்கொரு கூடாரத்தினுள் சென்று பார்த்தால், எந்தக் கூடாரத்தினுள்ளும் ஆள் இல்லை. எங்களுக்கு இருந்த மகிழ்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் அளவேயில்லை.

**குஷ்டரோகி 4:** சீரிய வீரர்களின் காதுகளில் குதிரைகள், இரதங்கள் மற்றும் மகா ராணுவத்தின் இரைச்சலைக் கர்த்தர் கேட்கும்படி செய்ததால், அவர்கள் தமக்குள், ''ஏத்திய மற்றும் எகிப்திய அரசர்களின் துணையுடன் இஸ்ரவேல் அரசன் நம்மோடு போர் செய்யவருகிறான்!'' என்று பயந்து அன்று மாலையே தங்கள் கூடாரங்கள், குதிரைகள், கழுதைகள் முகாமில் உள்ள எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டுத் தம் உயிருக்காகத் தப்பி ஓடிவிட்டனர்.

**குஷ்டரோகி 2:** எங்கள் கண்களை எங்களாலேயே நம்ப முடியவில்லை. அவர்கள் கூடாரங்களில் புசிப்பதற்கு ஏராளமான உணவு வகைகள் இருந்தன. மிகுந்த மகிழ்ச்சியோடு திருப்தியாக புசித்துக் குடித்தோம். மட்டுமல்ல வெள்ளியும் பொன்னும் வஸ்திரங்களும் ஏராளமாய் கொட்டிக் கிடந்தன. எங்களால் இயன்ற அளவு சேகரித்துப் போய் பத்திரமான இடத்தில் ஒளித்து வைத்தோம்.

**பக்தி:** பின்னர் என்ன நடந்தது?

**குஷ்டரோகி 2:** பின்னர் தான் நாங்கள் சிந்தித்தோம்; நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள். நாம் மௌனமாக இருந்தால், பொழுது விடியுமட்டும் காலம் தாழ்த்தினால் குற்றம் நம்மேல் சுமரும். இப்போதும் நாம் போய் ராஜாவின் அரண்மனையாருக்கு இதை அறிவிப்போம் என்று தீர்மானித்தோம். அதன்படியே செய்தோம், சமாரியா எங்கும் உள்ள ஜனங்கள் அனைவருக்கும் உணவு கிடைத்தது. பொழுது விடிவதற்குள் பசி, பட்டினி தாகம் எல்லாம் தீர்ந்து முழு சமாரியாவுக்கும் மகிழ்ச்சி திரும்பியது.

**பக்தி:** சபாஷ்! மற்றவர்கள் தரும் உணவை சாப்பிட்டு வாழ்ந்த உங்களால் அன்று கொடிய பஞ்சத்தினால் வாடிய ஒரு முழு நகரத்திற்குமே உணவு கிடைத்தது. உங்களுக்கே பிரயோஜனமில்லை என்று நினைத்துக் கொண்டிருந்த உங்களால் ஒரு முழு நகரத்திற்குமே ஆசீர்வாதம். எதிரிகளின் பாளயத்திற்குள் துணிந்து சென்று, அங்கு உணவு இருப்பதை அறிந்து பொதுநல மனதோடு, இரவோடு இரவாக நற்செய்தியை அறிவித்த உங்களின் அசாதாரணமான செயல் மிகவும் பாராட்டத்தக்கது.நீங்கள் இன்றைய வாலிபர்களுக்கு சொல்ல விரும்புவது என்ன?

**குஷ்டரோகிகள்:** **அன்பு தம்பியே, தங்கையே! உங்களுக்குள் இருக்கும் உங்கள் திறனை நீங்கள் அறியாமலிருக்கலாம். என்னால் யாருக்கும் பிரயோஜனம் இல்லை என்று கருதலாம். பெலவான்களை வெட்கப்படுத்தும்படி பெலவீனரைத் தெரிந்துக் கொள்ளும் தேவன், ஞானவான்களை வெட்கப்படுத்தும்படி பைத்தியங்களை தெரிந்துக் கொள்ளும் தேவன், யாரைக் கொண்டும் எப்பேர்ப்பட்ட அரிய காரியங்களையும் செய்வார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்று தான். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் தைரியமாய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும். இயேசுவை அறியாததினால் பாவம், சாபம், கடன், வியாதி, பசி பட்டினி போன்ற பிரச்சனையினால் அனுதினமும் அநேக ஜனங்கள் மரித்துக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் 'இயேசு' என்னும் நற்செய்தியை அறிவிப்பீர்களானால் அவர்களும் சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைந்து நித்திய ஜீவனுக்குப் பாத்திரராய் மாறுவார்கள். செய்வீர்களா? விடைபெறுகிறோம். நன்றி**

**பக்தி:** நிச்சயம் எங்கள் வாலிபர்கள் செய்வார்கள். நன்றி அண்ணாச்சிமார்களே!

# செய்திகள்!

## இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை 23.22 சதவீதம்!

### 100% வேலைவாய்ப்பு கிடைக்க நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசுக்கு வலியுறுத்தல்!




சர்வதேச தொழிலாளர்கள் அமைப்பின் சமீபத்திய ஆய்வு அறிக்கையின்படி 15 வயது முதல் 34 வயது வரை உள்ள இளைஞர்களின் வேலைவாய்ப்பின்மை இந்தியாவில் 23.22 சதவீதம் உள்ளது. 35 வயதுக்கு மேல் வேலைவாய்ப்பின்மை கேள்விக்குறியாக உள்ளது. உலக நாடுகளின் வேலைவாய்ப்பின்மை குறித்த விவரத்தில் இந்தியா முதலிடம் உள்ளது. இதே நிலை நீடித்தால் இளைஞர்களின் எதிர்காலம் என்ன ஆகும். வேலைவாய்ப்பின்மையால் சட்டம்-ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருட்களுக்கு அடிமையாவதற்கும், குழந்தைகள் தவறான பாதையை தேர்ந்தெடுக்கவும் நாம் வழிவகுக்கிறோம். இன்று நாம் செயல்படாவிட்டால் நமது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். கடந்த 2020ம் ஆண்டு வேலையின்மையின் காரணமாக நாடு முழுவதும் 3548 பேர் தற்கொலை செய்து கொண்டதாக ஒன்றிய அரசு புள்ளி விவரம் கொடுத்துள்ளது. வேலைக்கான மனிதர்கள் தேவை அதிகமாக உள்ளது. ஆனால் நம் மக்களிடையே போதுமான விழிப்புணர்வு இல்லை. படித்த இளைஞர்கள் வேலை இல்லாததற்கு இதுவே காரணம். இந்தியாவில் 100% வேலைவாய்ப்புகள் அனைவருக்கும் கிடைக்க இந்தியாவின் வேலைவாய்ப்பின்மைக்கு விரைவில் தீர்வு காண அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். நமது சந்ததியின் வளர்ச்சி, நமது குடும்பத்தின் வளர்ச்சி, நமது தேசத்தின் வளர்ச்சி, தேசத்தின் இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் விரைவில் 30% முதல் 70% வரை உயரும் மிக பெரிய பொருளாதார ஜிடிபி கூறினார்.

**- தினகரன், 10 நவம்பர் 2023.**

## வருமான ஏற்றத்தாழ்வு முன்னணியில் இந்தியா!

### ஐநா அறிக்கை



ஐக்கிய நாடுகள் சபையின் வளர்ச்சி திட்டம் (யுஎன்டிபி) 2024ம் ஆண்டிற்கான ஆசிய பசிபிக் மனித மேம்பாட்டு அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை நீண்ட கால முன்னேற்றம் இருப்பதை சுட்டிக் காட்டிய அதே வேளையில் தொடர்ச்சியான பணக்காரர், ஏழை ஏற்றத்தாழ்வு நிலவுவதை குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவை பொறுத்த வரையில், 2000ம் ஆண்டு முதல் 2022ம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் தனிநபர் வருமானம் ₹36,244 என்பதில் இருந்து ₹1 லட்சத்து 95 ஆயிரத்து 898ஆக அதிகரித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளது. மேலும், 2015-16 மற்றும் 2019-21க்கு இடைப்பட்ட காலத்தில் வறுமையில் வாழும் மக்களின் பங்கு (சர்வதேச வறுமை அளவீடுகளின்படி ஒருநாளுக்கு ₹177 வருமானம் ஈட்டுவோர் என்கிற அடிப்படையில்) 25 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக சரிந்துள்ளது.

ஆனாலும், நாட்டின் மக்கள் தொகையில் 45 சதவீதம் பேர் வசிக்கும் மாநிலங்களில் வறுமை தொடர்ந்து குவிந்துள்ளது. அங்கு தான் 62 சதவீத ஏழைகள் வாழ்கின்றனர் என்பதை அறிக்கை சுட்டிக் காட்டி உள்ளது. முக்கியமாக 2000க்குப் பிறகு உலகம் முழுவதும் பணக்காரர், ஏழை ஏற்றத்தாழ்வு அதிகளவில் உயர்ந்துள்ளது. குறிப்பாக, இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளில், நாட்டின் மொத்த வருமானத்தில் 50 சதவீதத்திற்கு மேற்பட்டதை 10 சதவீத பணக்காரர்கள் பெறுகின்றனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**- தினகரன், 7 நவம்பர் 2023.**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211



# உண்மையை தெரிந்துகொள் !

## இஸ்ரவேல் தேசத்தில் நடைபெறும் போருக்கான காரணம் என்ன?

இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்த 3 பள்ளி மாணவர்களை ஹமாஸ் இயக்கத் தீவிரவாதிகள் கடத்திச் சென்று கழுத்தை அறுத்துக் கொன்றனர். இதைப்பார்த்து ஆத்திரமடைந்த சில யூதர்கள் ஒரு பாலஸ்தீன வாலிபனைப் பிடித்து அடித்துக் கொன்றனர். இஸ்ரவேல் வாலிபர்களைக் கொன்ற பாலஸ்தீனர்களை அந்த அரசு கண்டிக்கவோ, கைது செய்யவோ இல்லை. ஆனால் ஒரு பாலஸ்தீன வாலிபனைக் கொன்றதற்காக இஸ்ரவேல் அரசு 3 பேரை கைது செய்தது.

பாலஸ்தீன வாலிபனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட இஸ்லாமியர்கள், ஹமாஸ் இயக்கத் துணையோடு வெறிகொண்டு இஸ்ரவேலை குறிவைத்து தாக்கினர். இஸ்ரவேல் அவர்களை அடக்கியது. இதில் ஆத்திரம் அடைந்த ஹமாஸ் இயக்கம் குண்டு வீசியது. பதிலுக்கு இஸ்ரவேல் ராணுவமும் குண்டு வீசியது. இது தான் இப்போது நடைபெற்று கொண்டிருக்கும் போருக்கான காரணம். ஹமாஸ் தீவிரவாத இயக்கத்தின் தூண்டுதலால் சாதாரண மக்கள் கொலை செய்யப்படுகின்றனர்.

## உண்மையில் அங்கே நடப்பது என்ன?

ஹமாஸ் இயக்கம் என்பது ஒரு ராணுவம் அல்ல, அது ஒரு தீவிரவாத இயக்கம். இஸ்ரவேல் தேசத்தை எப்படியாவது அழிக்க வேண்டும் என்பது தான் இவர்களது ஒரே குறிக்கோள். ஆனால் பாலஸ்தீன மக்கள் அமைதியை விரும்பும் சாதாரண மக்கள். இஸ்ரேல் தேசம் தன் நாட்டு மக்களைக் காத்துக்கொள்ள போரில் குதித்துள்ளது. ஆனால் ஹமாஸ் இயக்கம் சாதாரண மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தி அவர்களை பலியாக்கி வருகிறது.

பாலஸ்தீனர்கள் அமைதியை விரும்புகிறார்கள். ஆனால் ஹமாஸ் இயக்கமோ போரை விரும்புகிறது. அதனால் தான் இஸ்ரேல் போர் நிறுத்தத்தை அறிவித்த பின்னரும் ஹமாஸ் குண்டு வீசி தாக்கி வருகிறது. இந்த சண்டையினால் 500 பேர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் கூறி வருகிறது.

இஸ்ரவேலில் ராணுவத்தினர் (இஸ்ரேல்) மட்டும் தான் தாக்கப்பட்டனர். ஆனால் பாலஸ்தீனத்தில் மக்களும் போருக்கு இரையாகின்றனர். காரணம் ஹமாஸ் இயக்கத்தினர் மக்கள் மத்தியில் மறைந்து நின்று ஏவுகணைகளை வீசுகின்றன. இஸ்ரேல் மீண்டும் தாக்கும்போது தீவிரவாதிகளோடு மக்களும் பலியாகின்றனர்.

இஸ்ரவேல் ராணுவத்தினர், பாலஸ்தீனத்திலுள்ள மருத்துவமனை, பள்ளிக்கூடங்கள், மக்கள் வசிக்கும் பகுதிகளில் குண்டுகளை வீசி வருவதாக செய்தி சேனல்கள் தகவல்களை கொடுத்து வருகின்றன. ஆனால் ஹமாஸ் இயக்கம் இந்த இடங்களில் தான் பதுங்கு குழிகளை அமைத்து குண்டுகளை வீசி வருகிறது. இதனால் இஸ்ரேல் அரசுக்கு வேறு வழி தெரியவில்லை. குண்டு வீச்சில் பல தீவிரவாதிகள் கொல்லப்படுகிறார்கள். ஆனால் இவர்களையும் அப்பாவி மக்கள் என்று ஹமாஸ் இயக்கம் பொய்யான தகவலைப் பரப்பி வருகிறது.

**ஹமாஸ் என்ற தீவிரவாத இயக்கத்தின் மூலமாக பலியாகும் அப்பாவி மக்கள் பாதுகாக்கப்பட நாம் மன்றாடி ஜெபிக்கிறோமா?**

ஆதாரம்: வெப்சைட்

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 11 -2023
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

இயேசு விடுவிக்கிறார் ஊழியங்கள் நடத்தும்

நாலுமாவடியில்...

# Achievers 2024

(தேர்வு எழுதும் மாணவ மாணவியர்களுக்கான சிறப்பு பிரார்த்தனை)

ஆலோசனையும் ஜெபமும் :

## சகோ. மோகன் சி. லாசரஸ்



நாள் : **ஜனவரி 26,** (வெள்ளிக்கிழமை)

நேரம் : காலை 10 முதல் மதியம் 1 மணி வரை

இடம் : தேவனுடைய கூடாரம், நாலுமாவடி



தோல்வி பயமா? தேர்வைக் குறித்த கலக்கமா?
படித்தது மறந்து போகிறதா? சந்தேகமா?
இயேசு உங்களுக்கு விடுதலை தருவார்!

பள்ளிக் கல்லூரியில் படிக்கும் மாணவ மாணவியர் கலந்து கொள்ளுங்கள்!
பெற்றோரே உங்கள் பிள்ளைகளை அனுப்பி வையுங்கள்.